**தென்னிந்திய திருச்சபை**
**மதுரை-இராமநாதபுரம்**
**பேராயம்**

# 2017-ம் ஆண்டு

## ஞாயிறு ஆராதனைகளில் பயன்படுத்தவேண்டிய சிறப்பு ஜெபங்கள், அருளுரைத் தலைப்புகள் மற்றும் தியானக் குறிப்புகள்

கிறித்தவக் கல்வித் துறை

**மதுரை–இராமநாதபுரம் பேராயம்**

Published by Christian Education Department of
Diocese of Madurai and Ramnad
under the project of CARDIA (Congreation Accompanied Reformed Dikonia In Action) which is supported by EMS through CSI-SEVA

Printed by
**Berachah Print Service,** Madurai - 625005.
Ph.+91-452-2484121; Mobile: +91-7667990722

## மொழிபெயர்ப்பில் உதவியவர்கள்

Rev. A.V. காலேப்

Rev. v. டேனியல் ரவி

Rev. J. ஜோ டேனியல்

## மதுரை-இராமநாதபுரம் பேராயரிடமிருந்து

**அன்புக்குரிய உடன் ஊழியர்களே,**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்களை வாழ்த்துகிறேன்.!

2017-ம் ஆண்டை மனமகிழ்ச்சியின் ஆண்டு (Year of Joy) என கடவுளின் வழிநடத்துதலால் திட்டமிட்டுள்ளோம். இவ்வாண்டில் கடவுளின் மகிழ்ச்சியை அனைவருக்கும் அளிக்கும் கருவிகளாக அழைக்கப்பட்டுள் ளோம்.

**"கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி அதை மகிமையாக எண்ணுவாயானால்.. கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்"** (ஏசாயா 58:13-14).

கர்த்தருடைய நாளுக்குரிய முக்கியத்துவத்தை நாம் கொடுக்கும்போது நம் வாழ்வில் கர்த்தர் தரும் மனமகிழ்ச்சியையும் கடவுள் வாக்கருளின ஆசீர்வாதங்களையும் பெறமுடியும். இந்த நம்பிக்கையில் வளரவும் சபையாரை வளர்க்கவும் அழைக்கப்படுகிறோம்.

நமது ஞாயிறு ஆராதனைகளில் பயன்படுத்துவதற்கென தென்னிந் தியத் திருச்சபைத் தயாரித்துள்ள அருளுரைத் தலைப்புகள் திருமறைப் பகுதிகள் பின்பற்றி இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ நம்பிக்கையில் வளரத் தேவையான அடிப்படை சத்தியங்கள் அனைத்தும் ஓராண்டுக்குள் கற்றுக்கொள்ள ஏற்றவாறு இவை திட்டமிடப்பட்டுள்ளன. ஆகவே ஆயர்கள், உபதேசியர்கள், தன்னார்வத் தொண்டர்கள் இதன் அடிப்படையில் ஆராதனைக்கென ஆயத்தப்படவும் அருளுரைகள் ஆற்றவும் வேண்டுகிறேன். இது கருத்தோடும் பயபக்தியோடும் கடவுளின் ஆற்றலோடும் செய்யப்பட வேண்டியதாகும்.

இவ்வாண்டின் திருப்பணி நமக்கும் பிறருக்கும் கடவுளின் மகிழ்ச் சியை அருளுவதாய் அமையட்டும்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் திருப்பணியில்,

உங்கள் ஊழியன்

**M. ஜோசப்,** பேராயர்.

## ஜனவரி 1, 2017

## உடன்படிக்கை நாள் – Covenant Sunday

மனமகிழ்ச்சியின் ஆண்டு 2017

**Year of Joy 2017**

வாக்குத்தத்த வசனம்

**“கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்”**

ஏசாயா 58:13-14

## ஜனவரி 1, 2017

## கர்த்தருடைய நாளின் மகிழ்ச்சி

## Joy of the Day of the Lord

அன்பின் கடவுளே! நிறைவாழ்வின் உடன்படிக்கையை உம்முடைய அனைத்து படைப்புகளோடும் ஏற்படுத்தியவரே, உம்முடைய புதிய உடன்படிக்கையின் பாத்திரம் வழியாகவும் கிறிஸ்துவின் இரத்தம் மூலமாகவும் எங்கள் மனசாட்சியை தீய வழிகளுக்கு நேராக எடுத்து செல்லும் செயலிலிருந்து எங்களை கழுவும்படியாய் வேண்டுகிறோம். அப்போதுதான் நாங்கள் ஆவிக் குரிய பிள்ளைகளாக உம்முடன் உள்ள உடன்படிக்கையின் உறவுக்குள் தொடர்ந்து வாழமுடியும். சதாகாலமும் ஒரே கடவு ளாய் உம்மோடும் தூய ஆவியோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி அதை மகிமையாக எண்ணுவாயானால்.. கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்** -ஏசாயா 58:13,14.

## ஜனவரி 6, 2017

## பிரசன்னத் திருநாள்

| | | |
|---|---|---|
| ஏசாயா 45:18-25 | : | உலகிற்கான ஆண்டவர். |
| வெளி.21:22-27 | : | ஆண்டவரே ஆலயம், ஒளி, விளக்கு. |
| மத்தேயு 2:1-12 | : | ஞானிகள் வழி வெளிப்பட்ட ஆண்டவர். |
| சங்கீதம் 67 | : | கடவுளின் மீட்பிற்கும் ஆளுகைக்கும் நன்றி. |

எல்லாம் வல்ல கடவுளே, உமது மைந்தன் இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்முடைய ஆழமான அன்பை வெளிப்படுத்திக் காட்டி எங்கள் அனைவரையும் ஒன்றாக்கியவரே, உம்முடைய மாம்சமான வார்த்தையின் பிரகாசத்தில் எங்களை கூட்டிச் சேர்த்து எங்கள் வாழ்வை பிரகாசிப்பிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறோம். அப்போதுதான் தொடர்ந்து உம்முடைய மகிமையையும், அன்பையும் வெளிப்படுத்தும்படியாக நாங்கள் உம்மில் திருமுழுக்குப் பெற்று உம்முடைய ஒளியில் ஒன்றாய் நடப்போம். இவைகளை சதாகாலமும் ஒரே கடவுளாய் உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

## ஜனவரி 8, 2017

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

## கடவுளின் ஆலயமாகிய சரீரத்தைக் கனப்படுத்துதல்
## Honouring the Body as Temple of God

| | |
|---|---|
| பிரசங்கி 6:1-12 | : நிலையற்ற மனித வாழ்வு |
| 1கொரிந்தியர் 3:16-23 | : சரீரமே கடவுளின் ஆலயம் |
| மத்தேயு 5:21-30 | : நல்லுறவும், உறவின்மைக்கான தண்டனையும் |
| சங்கீதம் 1 | : வாழ்வின் இருவழிகள் |

தூய கடவுளே, அழிந்துபோகின்றவைகளிலல்ல மாறாக விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் இரத்தத்தினால் வெறுமை யான வாழ்வினின்று எங்களை மீட்டெடுத்தவரே, நாங்கள் தீயோருடைய வழியில் செல்லாதபடிக்கும், பாவிகளுடைய வழியில் நில்லாதபடிக்கும், ஏமாற்றுகின்ற கூட்டத்தாரோடு உறவு கொள்ளாதபடிக்கும், எங்களை மயக்குகின்ற பானம் மற்றும் உணவில் விருப்பம் கொள்ளாதபடிக்குத் தொடர்ந்து எங்களை பரிசுத்தப்படுத்த உதவும்படி வேண்டிக்கொள்கிறோம். எங்களு டைய உடல் உம்முடைய ஆலயமாய் இருக்கிறது. இவ்வாலயம் எங்களுடைய பேராசையாலும், இச்சையினாலும் ஒருபோதும் பரிசுத்த குலைச்சல் அடையக்கூடாதபடிக்கு சதாகாலமும் ஒரே கடவுளாய் உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவி யினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். -2 கொரி.6:20.**

## ஜனவரி 15, 2017

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு

## ஐக்கியத்திற்கான அழைப்பு
## Called to Unity

| | | |
|---|---|---|
| எசேக்கியல் 37:15-23 | : | யூதாவும் இஸ்ரவேலும் ஐக்கியமாதல் |
| எபேசியர 4:1-6 | : | கிறிஸ்துவின் உடலில் ஐக்கியம் |
| யோவான் 15:1-12 | : | திராட்சைக் கொடியான இயேசுவுடன் ஐக்கியம் |
| சங்கீதம் 133 | : | சகோதர ஐக்கியத்தின் சிறப்பு |

எல்லாம் வல்ல கடவுளே. நாங்கள் எல்லாரும் ஒன்றிணைந்து ஐக்கியமாய் வாழ எங்களை அழைத்தவரே, நாங்கள் உம்மில் நிலைத்திருக்கவும், நீர் எங்களில் நிலைத்திருக்கும்படியாக சமாதான பிணைப்பில் ஆவியின் ஒற்றுமையை நாங்கள் காத்துக்கொள்ள வேண்டுகிறோம். அப்போது நாங்கள் எங்களுக்குள்ளே எந்த ஒரு பாகுபாடும் இல்லாதபடிக்கு சிந்தனையிலும், எண்ணத்திலும் சிறந்த முறையில் ஒன்றுபட்டு, கனி கொடுக்கிறவரகளாய் இருப்போம் என்று ஒரே கடவுளாய் சதாகாலமும் உம்மோடும் தூய ஆவியோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், இன்பமுமானது.** -சங்கீதம் 133:1.

## ஜனவரி 22, 2017

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

## ஒருமைப்பாட்டு ஞாயிறு – Ecumenical Sunday

## விசுவாசத்திலும் செயலிலும் ஐக்கியம்
## Unity in Faith and Action

| | | |
|---|---|---|
| யோசுவா 3:9-17 | : | விசுவாசத்தோடு யோர்தானைக் கடந்த இஸ்ரயேலர். |
| அப்.9:20-25 | : | சவுலின் போதனையும், திருச்சபையுடனான ஐக்கியமும். |
| மாற்கு 1:21-34 | : | தீய ஆவி பிடித்தவரின் அறிக்கை. |
| சங்கீதம் 53 | : | இறைப்பற்று இல்லாதவர்கள் நிலை. |

எல்லாம் வல்ல கடவுளே. நாங்கள் எல்லாரும் ஒன்றிணைந்து ஐக்கியமாய் வாழ எங்களை அழைத்தவரே, நாங்கள் உம்மில் நிலைத்திருக்கவும், நீர் எங்களில் நிலைத்திருக்கும்படியாக சமாதான பிணைப்பில் ஆவியின் ஒற்றுமையை நாங்கள் காத்துக்கொள்ள வேண்டுகிறோம். அப்போது நாங்கள் எங் களுக்குள்ளே எந்த ஒரு பாகுபாடும் இல்லாதபடிக்கு சிந்தனை யிலும், எண்ணத்திலும் சிறந்த முறையில் ஒன்றுபட்டு, கனி கொடுக்கிறவர்களாய் இருப்போம் என்று ஒரே கடவுளாய் சதாகாலமும் உம்மோடும் தூய ஆவியோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அப்படியே விசுவாசமும், கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்.** -யாக்கோபு 2:17.

## ஜனவரி 26, 2017

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

## குடியரசுத் திருநாள் – Republic Day

நாட்டை உருவாக்குவதில் பங்கு

Participation in Nation Building

| | |
|---|---|
| நெகேமியா 21:11-18 | : எழுந்து கட்டுவோம் என்ற அழைப்பு. |
| 1 பேதுரு 2:13-17 | : நாட்டைக் கட்டுவதில் கிறிஸ்தவரின் பங்கு |
| சங்கீதம் 101 | : நாட்டைக் கட்டுவதில் அரசரின் பங்கு. |

## ஜனவரி 29, 2017

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு

## மெய்யான இறைப்பற்று - True Piety

| | | |
|---|---|---|
| மீகா 6:1-8 | : | கடவுள் விரும்பும் இறைப்பற்றின் தன்மை. |
| யாக்.1:19-27 | : | இறைவார்த்தையைக் கேட்டலும் செயல் படுத்தலும். |
| மத்தேயு 6:1-8 | : | உண்மையான தான தர்மங்களின் தன்மை. |
| சங்கீதம் 42 | : | நோயுற்றவரின் கடவுள் நம்பிக்கை. |

நன்மைகளின் உறைவிடமான கடவுளே, இவ்வுலகம் மாற்றுருவாக்கம் பெற தம்மையே ஈந்தளித்த உம்முடைய மைந்தன் இயேசு கிறிஸ்துவுக்காய் நாங்கள் நன்றி செலுத்துகின்றோம். உண்மையான தேவபக்தி என்பது சமயக் கடமைகளை நிறைவேற்றுவதில் அல்ல மாறாக உண்மையான உள்ளத்தோடு நேர்மையாய் வாழ்ந்து, தெளிந்த சிந்தையோடு எங்களுடைய அழைப்பின் சிறப்பை உணர்ந்து ஒவ்வொரு நாளும் நாங்கள் வாழவேண்டும் என்பதை எண்ணிப்பார்க்க எங்களுக்கு ஆற்றல் தாரும். எங்களுடைய செயல்களையும், உறவுகளையும் சரி செய்து, உம்முடைய ஒளி எங்கள்மேலும், எங்களுக்குள்ளும் பிரகாசிக்கும்படியாகவும் நாங்கள் உம்முடைய ஐக்கியத்தில் வாழ்ந்திட நீர் கிருபைசெய்து தயவாய் எங்களை வழிநடத்தும் படியாய் தேவ பக்தியை ஒவ்வொருநாளும் எங்களுக்குள் வளரச் செய்கிற இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் வழியாய் வேண்டிக்கொள்கிறோம்.. ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.** -யாக்கோபு 1:22.

## பிப்ரவரி 1, 2017

## ஆராதனையின் மகிழ்ச்சி - Joy of Worship

சங்கீதம் 100

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.** -சங்.100:2

## பிப்ரவரி 05, 2017

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு

## கிறிஸ்து வாழ்வின் இசை நயம்

## Christ : The Rhythm of LIfe

யாத்.15:1-21 : கடவுள் தந்த விடுதலைபற்றி மோசேயின் பாடல்

எபே.5:15-21 : கிறித்தவ வாழ்விற்கான நெறிமுறைகள்

லூக்.8:26-39 : லேகியோனிடமிருந்து விடுதலையும், வாழ்வும்.

சங்.149 : மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியுறும் ஆண்டவர்.

எல்லாம் வல்ல கடவுளே, பரலோக தந்தையே, உம்முடைய மைந்தன் இயேசு கிறிஸ்துவினால் நாங்கள் பாவ அடிமைத்தன கட்டுகளிலிருந்து மீட்டெடுக்கப்பட்டோம். உம்முடைய புகழ் எப்போதும் எங்கள் நாவில் இருக்கும்படியாய் வேண்டுகிறோம். இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீர் வெளிப்படுத்தின ஆராய்ந்து முடியாத அன்பை பகிரவும், அனுபவிக்கவும், எங்களுக்கு நீர் பொழிந்தருளிய பல்வேறுவிதமான ஆசீர்வாதங்களுக்காய் நாங்கள் நன்றி உள்ளவர்களாய் இருக்க உதவி செய்யும்படி பாவ அடிமைத்தன கட்டுகளிலிருந்து எங்களை மீட்டெடுத்த எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் வழியே வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும் சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங்கடவர்.** -சங்.149:2

**பிப்ரவரி 12, 2017**

**பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறு**

## ஓய்வுநாள் படைப்புகளின் சிகரம்

## Sabbath is the Culmination of Creation

| | | |
|---|---|---|
| ஏசா.65:17-25 | : | புதிய வானமும், புதிய பூமியும் - புது படைப்பு. |
| எபி.4:2-13 | ; | கடவுள் தரும் ஓய்வின் தன்மை. |
| மாற்கு 2:23-28 | ; | ஓய்வுநாளுக்கும் ஆண்டவர். |
| சங்கீதம் 8 | : | கடவுளின் மகிமையும், மானிடரின் மேன்மையும். |

படைப்புகளின் கடவுளே, எங்களை மகிமையும், கனமுமாய் படைத்தபின் அனைத்து வேலைகளிலிருந்தும் ஓய்ந்திருந்து இவ்வாறாக ஓய்வுநாளை ஆசீர்வதித்து தூய்மையாக்கியவரே, நீர் உம்முடைய படைப்புகளுக்கு செய்த நன்மைகளை எண்ணிப் பார்க்கவும், படைப்பாளராக நீர் உம்முடைய மக்கள்மீது தங்கியிருப்பதை நாங்கள் கனப்படுத்தவும், இவ்ஓய்வுநாள் அனுசரிப்பை நீர் எங்களுக்கு தந்த ஒரு வாய்ப்பாகக் கருதி உம்மை நாங்கள் வேண்டிக் காள்கிறோம். அவ்வாறு நாங்கள் செய்யும்போது இந்த முழு படைப்பும், தூய்மையிலும், சமாதானத்திலும் நிரம்பி புதிய வானம் மற்றும் புதிய பூமியை நாங்கள் அனுபவிக்க முடியும் என்று எங்களை படைத்து, காத்து ஓய்ந்திருக்க கற்றுக்கொடுத்த உம்மிடம் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.** -எபிரேயர் 4:10

## பிப்ரவரி 19, 2017

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 7-ம் ஞாயிறு

## வீழ்ச்சி படைப்பின் நோக்கத்தைப் பாழாக்கியது

## Fall as the violation of the purpose of creation

| | | |
|---|---|---|
| ஆதி.6:1-13 | : | மனிதரின் தீய செயல்களும் நோவாவுக்கு கிடைத்த கிருபையும். |
| ரோமர் 7:4-25 | : | திருச்சட்டத்தின் நோக்கத்தை பாழாக்கிய பாவம். |
| மத்.7:15-23 | : | பிதாவின் சித்தப்படி செய்யாதவர்கள் |
| சங்.32 | : | பாவ அறிக்கையும் மன்னிப்பும். |

மனவுருக்கமுள்ள கடவுளே, நல்ல கனிகொடுக்கும்படி எங்களை படைத்தவரே, நாங்கள் தீமையான காரியங்களை செய்யவும், கீழ்ப்படியாதபடி நடக்கவும், நீர் எதிர்பார்க்கும் நல்ல காரியங்களைச் செய்யாமல் நாங்கள் விரும்புகின்ற காரியங்களைச் செய்ய எங்கள் மனதை சாய்க்கும் நிலையை நீர் உம்முடைய ஆற்றலினால் கட்டுப்படுத்தவேண்டும் என்று வேண்டுகிறோம். அப்போது நாங்கள் உம்முடைய விருப்பத்தை மட்டும் செய்து, நல்ல கனிகளை உம்முடைய இராஜ்ஜியத்தில் கொடுக்கும் சீஷர்களாக வாழ்வோம். மேலும் நிறைவாழ்வை பெற்றுக்கொள்ளும்படி எங்களை நாங்களே ஆயத்தப்படுத்திக் கொள்வோம் என்று இவ்வுலகில் உம்முடைய மைந்தனாய் கனி கொடுக்கும்படி வந்து எங்களை எல்லாம் தம்முடைய இராஜ்ஜியத்தில் இணைத்துக் கொண்ட எங்கள் நல்ல ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.** -ரோமர் 5:19

## பிப்ரவரி 26, 2017

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் எட்டாம் ஞாயிறு

### தபசு காலம் : மறுரூபமாக்கப்படுதலின் காலம்

### LENT : A Time of Transformation

| | | |
|---|---|---|
| ஏசாயா 44:21-28 | : | படைத்து, மீட்டு, மாற்றும் கடவுள். |
| ரோமர 11:13-24 | : | மறுரூபமமாக்கப்படும் காட்டொலிவ மரக்கிளை. |
| யோவான் 2:1-11 | : | கானாவூர் கலியாணம் : மாற்றமடைந்த தண்ணீர். |
| சங்கீதம் 6 | : | இக்கட்டுக் காலத்தில் உதவிவேண்டி மன்றாட்டு. |

கிருபையுள்ள கடவுளே, காலை பனி மூட்டத்தைப்போல எங்கள் பாவங்களையும், மேகங்களைப்போல எங்கள் மீறுதல் களையும் அகற்றிப் போடுகிறவரே, எங்கள்மீது கோபம் கொள் ளாதபடி எங்கள் மீறுதல்களிலிருந்து எங்களை மீட்டுக்கொள் ளும்படி வேண்டுகிறோம். உம்முடைய கிருபையை எங்கள் மீது பொழிந்தருளி எங்களை மறுரூபப்படுத்தும்படியாய் வேண்டுகிறோம். நாங்கள் அனைவரும் உம்முடையவர்கள். இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பி எங்களை பாதுகாத்துக் கொண்டவரே நாங்கள் பாவிகள் என்றாலும் நீர் அளிக்கும் நிறை வாழ்வை நாங்கள் பெற்றுக்கொள்வோம் என்று உம்மீது நம்பிக் கையாய் உள்ளோம். இவைகளை பாவ வாழ்க்கையிலிருந்து எங்களை மறுரூபப்படுத்துகின்ற எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**திரும்பும் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும் உம்மு டைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்.** -சங்.6:4

## மார்ச் 1, 2017
## வாக்குத்தத்தத்தின் மகிழ்ச்சி
## Joy of Promise

லூக்கா 1:46-55

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது.**

-லூக்கா 1:47

## சாம்பல் புதன் கிழமை
## மாரச் 1, 2017

## சிலுவை மனந்திரும்ப அழைக்கிறது
## CROSS : A call to Repentance

| | | |
|---|---|---|
| ஏசா.1:16-20 | : | மனந்திரும்ப கடவுளின் அழைப்பு |
| 2 கொரி.7:8-16 | : | மனம் மாறச் செய்யும் மனவருத்தம் |
| மாற்கு 1:12-15 | : | மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் |
| சங்கீதம் 51 | : | பாவ மன்னிப்புக்கான மன்றாட்டு |

## மார்ச் 05, 2017

## தபசு காலங்களில் முதலாம் ஞாயிறு

## சுத்திகரிக்கும் கிறிஸ்து

## The Cleansing Christ

| | | |
|---|---|---|
| சகரியா 13:1-19 | : | வெள்ளி, பொன் போல தூய்மைப்படுத்தும் கடவுள். |
| 1 யோவான் 1:5-10 | : | பாவத்தை நீக்கும் இயேசுவின் இரத்தம். |
| மாற்கு 1:40-45 | : | உமக்கு சித்தமானால் என்னைச் சுத்தமாக்கும். |
| சங்கீதம் 130 | : | மன்னிக்கும் ஆண்டவரின் உதவிக்காக மன்றாடல். |

மகா இரக்கமுள்ள கடவுளே, நாங்கள் பாவங்களிலிருந்தும், அசுத்தங்களிலிருந்தும் தூய்மையடையும்படியாக இரக்கத்தை நீரூற்றைப்போல எங்கள்மீது பொழிந்தருளியவரே, உம்முடைய அழியாத அன்பினால் எங்களை சுத்திகரித்து, உம்முடைய குமாரனின் தியாகத்தினால் எங்களை பரிசுத்தப்படுத்தும்படி வேண்டுகிறோம். அப்பொழுது நாங்கள் இருளான பாதையிலிருந்து விலகி உம்மோடும், பிறரோடும் ஐக்கியமாய் வாழமுடியும். இவைகளை எங்கள் எல்லாவித பாவங்களிலிருந்து தம்முடைய இரத்தத்தினால் கழுவி சுத்திகரித்த எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியே வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்.** -1 யோவான் 1:9

## மார்ச் 12, 2017

## தபசு காலங்களில் இரண்டாம் ஞாயிறு

## மன்னிக்கும் கிறிஸ்து

## The Forgiving Christ

ஆதி.4:8-16 : காயீனை மன்னிக்கும் கடவுள்.
ரோமர் 5:6-11 : கிறிஸ்துவின் மரணமும், கடவுள் நம்மீது கொண்ட அன்பும்.
மாற்கு 2:1-12 : மன்னிக்கப்பட்ட திமிர்வாதக்காரன்
சங்.25 : மன்னித்து, வழிநடத்த வேண்டல்.

அன்புள்ள கடவுளே, உம்முடைய குமாரனின் மரணத்தின் மூலமாக நீர் எங்களோடு ஒப்புரவாகி, யாரெல்லாம் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறார்களோ அவர்களை யெல்லாம் தொடர்ந்து மன்னித்து அதன்மூலம் உம்முடைய அன்பை எங்களுக்கு வெளிப்படுத்தியவரே, எங்களுடைய பாவங்களையும் எங்களுடைய மீறுதலான வழிகளையும் நீர் நினைக்காதபடி மாறாக உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்ற உம்முடைய வார்த்தையின்படி எங்களை மன்னிக்கும் படியாய் வேண்டுகிறோம். அப்போதுதான் எங்களை பேராசை யினால் வஞ்சித்து சீரழிக்கின்ற பழைய சுபாவத்தை களைந்து ஒருவர்மீது ஒருவர் அன்பு செலுத்தி, ஒருவரையொருவர் மன் னித்து பரிசுத்தமாய் வாழும் புதிய சுபாவத்தை கட்டிக்கொள் வோம். இவைகளை எல்லாம் எங்களை மன்னித்தும், பிறரை மன்னிக்க எங்களுக்கு கற்றுக்கொடுக்கின்ற எங்கள் இரக்க முள்ள ஆண்டவர் இயேசுவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.** -எபே.4:32

## மார்ச் 19, 2017

## தபசு காலங்களில் மூன்றாம் ஞாயிறு

## ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து
## The Accepting Christ

| | | |
|---|---|---|
| ஓசியா 2:14-23 | - | சோரம்போன இஸ்ரவேலை ஏற்கும் கடவுள். |
| பிலேமோன் 1:1-21 | - | ஒநேசிமுவை ஏற்றுக்கொள்ள வலியுறுத்தும் பவுல். |
| மத்தேயு 15:21-28 | - | கானானியப் பெண்ணின் நம்பிக்கையை ஏற்கும் இயேசு. |
| சங்கீதம் 87 | - | எருசலேமை ஏற்கும் கடவுள். |

இரக்கமுள்ள பிதாவே, விசுவாசம், அன்பு, மனதுருக்கம், நீதி, நியாயம் இவைகளின் மூலம் எங்களோடு உடன்படிக்கை ஏற்படுத்தியவரே, நாங்கள் உம்மைவிட்டு வழிவிலகி சென்றிருந் தாலும், எங்களை ஏற்றுக்கொண்டு மறுபடியும் உம்முடைய பாதைக்கு நேராய் திருப்பும்படி வேண்டிக்கொள்கிறோம். நாங்கள் உம்முடைய பிள்ளைகள், நீர் எங்களை பாதுகாக்கும் மீட்பர். இவைகளை எல்லாம் எங்களை ஏற்றுக்கொண்டு நாங்கள் வழிவிலகிச் செல்லாதபடி எங்களை நடத்துகின்ற எங்கள் வழிகாட்டியாம் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளு வேன்: நீ கர்த்தரை அறிந்துகொள்வாய்.** -ஓசியா 2:20

## மார்ச் 26, 2017

## தபசு காலங்களில் நான்காம் ஞாயிறு

## விடுவிக்கும் கிறிஸ்து
## The Liberating Christ

| | | |
|---|---|---|
| யாத்.3:1-13 | : | இஸ்ரயேலரை விடுவிக்க மோசேயை அழைக்கும் கடவுள். |
| கலா.5:1-12 | : | அடிமைத்தனத்திலிருந்து உரிமை வாழ்வு |
| லூக்.13:10-17 | : | ஓய்வுநாளில் விடுவிக்கப்பட்ட ஆபிரகாமின் மகள். |
| சங்.82 | : | நீதி, விடுதலை செய்ய அழைப்பு விடுக்கும் கடவுள். |

விடுதலையாளராம் எங்கள் கடவுளே, நாங்கள் படுகின்ற துன்பங்களை எப்போதும் பார்த்து நாங்கள் விடும் அழுகையின் கூக்குரலை எப்போதும் கேட்பவரே எங்களுடைய அடிமைத் தனம், பெலவீனம் ஆகிய நுகத்திலிருந்து எங்களை மீட்டுக் கொள்ளும். அப்போது மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதரானாலும், பிசாசானாலும், நிகழ்காலமானாலும், வருங் காலமானாலும், எந்த சக்தியானாலும், உயர்வானாலும், தாழ் வானாலும், வேறு எந்த ஒரு படைப்புகளானாலும் உம்முடைய அன்பிலிருந்து எங்களை பிரிக்கவே முடியாது என்று எங்கள் விடு தலையாளராம் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கி றோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**தேவனே என் இரட்சிப்பு நான் பயப்படாமல் நம்பிக்கையா யிருப்பேன்; கரத்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்; அவரே எனக்கு இரட்சிப்புமானவர்**

-ஏசாயா12:2.

## ஏப்ரல் 1, 2017
## கிறிஸ்துவுக்கு பங்காளிகளானதால் மகிழ்ச்சி
## Joy of Partnership with Christ

1 பேதுரு 4:2-16

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கிறிஸ்துவின் ... பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.** -1 பேதுரு 4:13

## ஏப்ரல் 02, 2017

## தபசு காலங்களில் 5-ம் ஞாயிறு

## Passion Sunday - பாடுகளின் ஞாயிறு

### சிலுவையும், மீட்டுருவாக்கும் கிறிஸ்துவும்

### Cross and the Restoring Christ

| | | |
|---|---|---|
| யோபு 42:10-17 | : | யோபுக்கு மீண்டும் சிறப்பு தரும் ஆண்டவர். |
| எபேசியர் 2:1-10 | : | நம்பிக்கையின் வழி மீட்கப்படுதல். |
| மாற்கு 10: 46-52 | : | பார்வை பெறும் பர்திமேயு. |
| சங்கீதம் 126 | : | அடிமை நிலையை மாற்றும் என்ற மன்றாட்டு. |

எங்கள்மீது ஆழ்ந்த அன்புகொண்டு, எங்களுடைய எல்லா அடிமைத்தனத்திலிருந்தும் எங்களை மீட்டெடுத்து எங்களை புதுப்பிக்கக்கூடிய கடவுள், எங்களுடைய மீறுதல்களை மன்னித்து எங்களை புதுப்பியும். அப்போது எங்களுடைய பார்வை புதுப்பொலிவு பெற்று உம்மை எங்கள் தேவனாக பறை சாற்றி தொடர்ந்து உம்மை பின்பற்றுவோம். இவைகளை சதா காலமும் ஜீவித்தரசாள்கின்ற எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்து வுடனேகூட உயிர்ப்பித்தார்: கிருபையினாலே இரட்சிக்கப் பட்டீர்கள்.** -எபேசியர் 2:5

## ஏப்ரல் 09, 2017
## குருத்தோலை ஞாயிறு

### கிறிஸ்து சமாதானத்தின் அரசர்
### Christ : The King of Peace

| | | |
|---|---|---|
| சகரியா 9:1-12 | : | கடவுளின் மக்களுக்கு தரப்படும் சமாதானம். |
| எபேசியர் 2:11-22 | : | கிறிஸ்து தரும் சமாதானம். |
| மாற்கு 11:1-11 | : | இயேசுவின் எருசலேம் நுழைவு - சமாதானத்தின் அரசராக. |
| சங்கீதம் 24 | : | மகிமையின் ராஜா. |

எல்லாம் வல்ல கடவுளே, மகிமையின் அரசரே, உம்முடைய அரசாட்சி பூமியின் கடைமுனை மட்டும் பரவுவதற்காக, உலகிற்கு சமாதானத்தை அருள்பவரே கெம்பீரமாக எங்கள் வாழ்வில் இடைபட்டு தடைகளையும், எங்களை ஒன்று சேராதபடிக்கு தடுக்கின்ற வேற்றுமைகளையும் தகரத்தெறிவீராக. அப்போது நாங்கள் ஒன்றுபட்டு ஒரே உடலாக, ஒரே மனுக்குலமாக, உம் முடைய பரிசுத்த ஆலயமாக, ஒன்றாக கட்டப்பட்டு உம்முடைய வாசஸ்தலமாக மாறுவோம். இவைகளை எல்லாம் எங்களை சமாதானத்திற்கு வழிநடத்துகின்ற சமாதான பிரபுவாம் எங்கள் நாதர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா

**சீயோன் குமாரத்தியே மிகவும் களிகூறு: எருசலேம் குமாரத் தியே கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்: அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ள வரும், கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மரியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.** -சகரியா 9:9

## கட்டளை வியாழன்
## ஏப்ரல் 13, 2017

## கிறிஸ்து: வாழ்வளிக்கும் உணவு
## Christ: The Life Giving Bread

| | |
|---|---|
| யாத்.12:12-20 | : வாழ்வு தரும் புளிப்பற்ற அப்ப விழா. |
| 1 கொரி.11:23-29 | : புதுஉடன்படிக்கை: ஆண்டவரின் உடலும் இரத்தமும். |
| யோவான் 6:47-58 | : இயேசு: வாழ்வு தரும் உணவு நானே. |
| சங்கீதம் 116 | : ஆண்டவரே உண்மையான கடவுள். |

## ஏப்ரல் 14, 2017

## பெரிய வெள்ளிக்கிழமை

### சிலுவை தன்னையளிக்கும் அன்பு

### Cross: Self Giving Love

ஏசா.52:13-53 : துன்புறும் பணியாளர்.

1 பேதுரு 2:21-25 : கிறிஸ்துவின் துன்புறும் முன்மாதிரி.

மாற்கு 15:22-41 : இயேசுவின் சிலுவை மரணம்.

சங்கீதம் 22 : துயரத்தின் நேரத்தில் மன்றாட்டு.

## ஏப்ரல் 16, 2017

## உயிர்த்தெழுந்த திருநாள்

## உயிர்த்தெழுதல்: இயேசுவில் புதுவாழ்வைக் கொண்டாடுதல்

## Resurrection : Celebrating Life in Jesus

| | |
|---|---|
| 1 இரா.17:17-24 | : சாரிபாத் விதவையின் மகன் உயிர்பெற்றெழுதல். |
| 1 கொரி.15:42-58 | : உயிர்த்தெழுதல்: அழியாத புதுவாழ்வு. |
| லூக்கா 24:1-12 | : இயேசுவின் உயிர்த்தெழுதல் |
| சங்கீதம் 118:1-4, 14-17 | : கடவுளின் செயல்களை விவரிக்க பிழைத்தல். |

வாழ்வளிக்கும் கடவுளே, உமது நேசகுமாரன் இயேசு கிறிஸ்து மூலமாக மரணத்தை வென்று நித்திய வாழ்விற்கான வழியைத் திறந்தவரே, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து, மரணத்திலிருந்து எழுந்து (வெற்றிபெற்று) வாழ்வடைந்ததை எண்ணி நாங்கள் உம்மை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றோம். அப்போது பெலவீனமும், கேவலமுமாய் விதைக்கப்பட்ட எங்களுடைய அழிவுள்ள உடல்கள், ஆண்டவருடைய இராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படியாய் ஆவிக்குரிய, மகிமையினாலும், வல்லமையினாலும், அழியாத உடல்களாய் எழுந்திருக்கப்படும். இவைகளை எல்லாம் மரணத்தை வென்று உயிரத்தெழுதலின் நம்பிக்கையூட்டிய எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.** -1 கொரிந்தியர் 15:52

## ஏப்ரல் 23, 2017
## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

## கிறிஸ்துவே கடவுளும், ஆண்டவரும் என உறுதிப்படுத்துதல்
## Affirmation of Christ as Lord and God

| | | |
|---|---|---|
| யாத்.3:13-17 | : | மோசேக்கு தன்னை வெளிப்படுத்தும் கடவுள். |
| கொலோ.1:15-23 | : | கிறிஸ்துவின் மேன்மை. |
| யோவான் 20:24-29 | : | நீரே என் ஆண்டவர் - தோமாவின் அறிக்கை. |
| சங்.93 | : | கடவுளின் அரசாட்சி. |

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் கடவுளான எங்கள் ஆண்டவரே, உமது படைப்புகளின் முதற்பலனாகிய உமது மைந்தனை எங்கள் பாவங்களுக்காக மரிக்க ஒப்புக்கொடுத்தவரே, அவருடைய உயிர்த்தெழுதலில் எந்த ஒரு சந்தேகமுமில்லாமல் உண்மையாய் அதில் நம்பிக்கைக் கொள்ள தயை செய்தருளும். அப்போது நாங்கள் இந்த நிலையான அஸ்திபாரத்தில் விசுவாசங்கொண்டு, உம்முடைய நற்செய்தியில் நாங்கள் கேட்டு அறிந்துகொண்ட அந்த நம்பிக்கையிலிருந்து எங்களை அசைக்க அனுமதிக்காதபடி எங்களை காக்க வேண்டுமென்று எங்கள் இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முதற்பேறுமானவர்.** -கொலோசெயர் 1:15

## ஏப்ரல் 30, 2017
## உயிரத்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு

## கிறிஸ்துவின் விருந்தோம்பலுக்கு அழைப்பு
## Invitation to Christ's Hospitality

| | | |
|---|---|---|
| ஆதி.18:1-10 | : | ஆபிரகாமின் விருந்தோம்பல் - மம்ரேயில். |
| எபி.13:1-8 | : | கடவுளுக்கு உகந்த வாழ்க்கை. |
| யோவான் 21:1-14 | : | கிறிஸ்துவின் அழைப்பு. |
| சங்.15 | : | கடவுள் மனிதரிடம் எதிர்பார்ப்பது. |

வாழ்கின்ற கடவுளே, எப்பொழுதும் எங்களை நேசிக்கும் நேசரே, நாங்கள் ஒருவரையொருவர் சகோதர, சகோதரியாக நேசிக்க உதவிபுரியும். அந்நியரை உபசரிக்கவும், தேவையில் உள்ள உம்முடைய மக்களுடன் பகிர்ந்துகொள்ளவும் உதவி புரியும். நாங்கள் உம்மிடத்தில் எதிரிகளைப்போலவும், அந்நியரைப் போலவும் வாழ்ந்தாலும், உம்முடைய நிலையான ஐக்கியத்திற்குள் எப்போதும் நாங்கள் வாழத்தொடர்ந்து எங்களுக்கு அழைப்பு கொடுக்கும் உம்முடைய மைந்தன் இயேசு கிறிஸ்துவைப்போல் நாங்கள் பிறருக்கு அன்புசெய்ய எங்களுக்கு கிருபைசெய்ய வேண்டுமென்று சதாகாலமும் ஜீவித்து அரசாளுகின்ற எங்கள் ஆண்டவரும், மீட்பருமான இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்: அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு.** -எபி.13:2

# மே 1, 2017

# ஆலயப்பணியினால் மகிழ்ச்சி

## Joy of the work of the house of Lord

எஸ்றா 6:19-22

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கர்த்தர் அவர்களை மகிழ்ச்சியாக்கி அவர்கள் கைகளை இஸ்ரவேலின் தேவன் என்றும் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலே பலப்படுத்தத்தக்கதாய்ப் ... பண்ணினார்.**

-எஸ்றா 6:22

# மே 7, 2017
# உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

## அனுதின வாழ்வில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடு இணைதல்

## Communion with the Risen Christ in Daily Life

| | |
|---|---|
| யாத்.40:34-38 | : கூடாரத்தினுள் கடவுளின் மாட்சி. |
| பிலிப்.3:8-16 | : கிறிஸ்துவுக்காக இலக்கை நோக்கி ஓடுதல். |
| லூக்.24:13-33 | : எம்மாவு வழியில் சீடர்களைச் சந்தித்தல். |
| சங்.23 | : ஆண்டவரே என் ஆயர். |

எங்கும் நிறைந்த கடவுளே, வனாந்திரத்தில் உமது மக்களை மேகஸ்தம்பம் மூலமாகவும், அக்கினி ஸ்தம்பம் மூலமாகவும் ஒரு மேய்ப்பனைப்போல வழிநடத்தியவரே. நாங்கள் ஒவ்வொரு நாளும் தனிமையிலும், சோர்விலும், வெறுமையிலும், நெடுந் தூரம் பயணம் செய்யும்போது நீர் எங்களோடு தொடர்ந்து பேசவும், தொடர்ந்து எங்களை வழிநடத்தும்படியாகவும் வேண்டுகிறோம். இதன்மூலம் நாங்கள் உம்முடன் ஐக்கியங்கொள்ளவும், எங்கள் அகக்கண்கள் திறக்கப்பட்டு உம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை நாங்கள் புரிந்துகொண்டு, உமது துன்பத்தில் நாங்களும் பங்குகொள்ளவும், பரலோகத்தில் எங்களுக்காக வைக்கப்பட்டுள்ள பொக்கிஷமாகிய பந்தையப்பொருளை பெற்றுக்கொள்ளத்தக்கதாக இலக்கை நோக்கி ஓட உதவி செய்யும்படி எங்களுக்காக மரித்து எங்களுக்காக உயிர்த்து எங்களோடு பயணம் செய்கிற எங்கள் ஆண்டவர் இயேசுவின் வழியே வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.**

-பிலிப்பியர் 3:14

## மே 14, 2017

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 4-ம் ஞாயிறு

## ஒரே வழியாகிய கிறிஸ்துவின்மீது நம்பிக்கை

## Believing in Christ: The Way

| | | |
|---|---|---|
| யாத்.14:10-20 | : | நானே ஆண்டவர். |
| அப்.16:19-34 | : | கிறிஸ்துவின்மீது நம்பிக்கைக் கொண்ட சிறைக்காவலர். |
| யோவான் 14:1-7 | : | நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். |
| சங்.116 | : | கடவுள் மீதான நம்பிக்கை. |

பெற்றவராம் எங்கள் கடவுளே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிற உம்முடைய மைந்தன் இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை நாங்கள் அறிந்திருக்கிறோம். நாங்கள் அவர் மீது நம்பிக்கையாய் இருக்கவும் அவரால் மீட்பைப் பெற்றுக் கொள்ளவும் எங்களுக்கு உதவி செய்யும். அப்போது நாங்கள் உம்முடைய ஒளியின் பாதையில் நடந்து ஒருவருக்கொருவர் நல்ல ஐக்கியமாய் இருப்போம். இவைகளை எல்லாம் எங்கள் வாழ்வின் ஒளியாய் இருக்கிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம் ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.**

-யோவான் 14:6

## மே 21, 2017

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 5-ம் ஞாயிறு

## கிறிஸ்துவின் சமாதானத்தைப் பகிர்கின்ற திருப்பணி

## Mission as sharing Christ's peace

| | | |
|---|---|---|
| மீகா 4:1-7 | : | கடவுளின் அரசாட்சியில் சமாதான கருவிகளாக மாற்றப்பட்ட போர்க்கருவிகள். |
| பிலி.4:4-9 | : | சிந்திக்க வேண்டியவைகள் பற்றிய அறிவுரை. |
| லூக்.24:36-49 | : | சமாதானத்தைப் பகிரும் உயிர்த்தெழுந்த இயேசு. |
| சங்.85 | : | நாட்டின் நலனுக்காக மன்றாடல். |

சமாதானக் காரணரே, எங்கள் இருதயத்தையும், சிந்தனைகளையும் சமாதானத்துடன் காத்து மனுக்குலத்திற்குச் சமாதானத்தை அருளுபவரே, உம்முடைய மாசற்ற அன்பையும், உம்முடைய இரட்சிப்பையும் எங்கள்மீது தயவாய் காண்பித்தருளும். அப்பொழுது நாங்கள் உம்முடைய சித்தத்தை நிறைவேற்றும்படியான எல்லா நற்காரியங்களை செய்வதற்கும், எங்கள் வார்த்தை மற்றும் செயல்பாடுகள் மூலமாக எல்லோருக்கும் நாங்கள் போதிக்க எங்களுக்கு தகுதியளித்தருளும். சிலுவையில் நீர் வெளிப்படுத்திய உன்னதமான செயல் எங்களை உம்முடன் சமாதானமாய் இருக்கச் செய்துள்ளது. இவைகளை எல்லாம் எங்களுக்காக தம்முடைய சமாதானத்தையே இழந்து தம்முடைய அருள் பணியில் எங்களை சமாதானத்தின் கருவிகளாய் எடுத்துப் பயன்படுத்துகின்ற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும் நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.**

-சங்கீதம் 85:10

## மே 28, 2017

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறு

### தூய ஆவியருக்கான வாக்குறுதி

### Promise of the Holy Spirit

| | | |
|---|---|---|
| யோவேல் 2:28-32 | : | ஆண்டவர் ஆவியைப் பொழிந்தருளும் நாள். |
| கலா.5:22-26 | : | தூய ஆவியரின் துணையால் வாழ்பவரிடம் இருப்பவை. |
| யோவான் 14:15-21 | : | வாக்களிக்கப்பட்ட ஆவியர் |
| சங்.42 | : | கடவுளுக்காக ஏங்கித் தவிப்போரின் மன்றாட்டு. |

கடவுளே, வாழ்வின் ஆதாரமே, உம்மில் எங்கள் உடல், சிந்தனை மற்றும் ஆவி இளைப்பாறி நம்பிக்கை பெற்றுள்ளது. எங்களுக்கென்று வழக்காடும்படியாய், ஆலோசனை தரும்படியாய், நீர் வாக்குத்தத்தம் செய்த உம்முடைய பரிசுத்த ஆவியானவரை எங்கள்மேல் ஊற்றி எங்களை ஆட்கொள்ளும். இதன்மூலம் நாங்கள் தூரக் காட்சியையும், தரிசனங்களைக் காணவும், நாங்கள் ஆவியின் கனிகளைப் பெற்று அதன்மூலம் உமக்கு சாட்சி பகருவோம். இவைகளை எங்களுக்காக தேற்றரவாளனாகிய தூய ஆவியை எங்களுக்கு அருட்கொடையாய் தந்த நாதர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்: உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.** -யோவேல் 2:28

## ஜுன் 1, 2017

## தேவ வசனத்தை ஏற்பதினால் மகிழ்ச்சி

## Joy of accepting the Word of God

1 தெசலோனிக்கேயர் 2:13-20

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நீங்கள் தேவ வசனத்தை. ஏற்றுக்கொண்டபோது. ... ...நீங்களே எங்களுக்கு மகிமையும், சந்தோஷமுமாயிக் கிறீர்கள்.** -1 தெசலோனிக்கேயர் 2:13,20.

## ஜுன் 4, 2017
## பெந்தெகொஸ்தே ஞாயிறு

## வாரும் தூய ஆவியரே, முழு படைப்பையும் மாற்றும்
## Come Holy Spirit, Transform the Whole Creation

| | | |
|---|---|---|
| எசே.36:24-36 | : | கடவுளால் மாற்றப்படும் இஸ்ரயேல் மக்கள். |
| அப்.2:1-13 | : | பெந்தொகோஸ்தே நாளின் அனுபவம்-மாற்றம் பெற்ற கலிலேயர். |
| யோவான் 20:19-23 | : | தூய ஆவியை அருளும் இயேசு கிறிஸ்து. |
| சங்.29 | : | முழுப்படைப்பின் மீதான ஆண்டவரின் மாட்சி. |

வாழ்வளிக்கும் கடவுளே, உம்முடைய எல்லா படைப்புகளுக்கும் புத்துயிர் தந்து உம்முடைய ஆவியை அக்கினிமயமான நாவுகளாக அனுப்பியவரே, உம்முடைய நம்பிக்கைக்கு பாத்திரவான்களாய் இருப்பவர்களை ஊக்கப்படுத்தி, உயர்த்தி, உம்முடைய தெய்வீக ஆவியை பொழிந்தருளும்படியாய் வேண்டுகிறோம். அப்போது இந்த அனைத்து படைப்புகளும், பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஏற்படும் மாற்றுருவாக்கத்தின் மூலம் கிறிஸ்துவின் அன்பில் ஒப்புரவாகும். இவைகளை எல்லாம் மாற்றுருவாக்கத்தின் காரணரான எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்.**

-எசேக்.36:27

## ஜுன் 11, 2017

## பெந்தெகோஸ்தே திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு - திரித்துவ ஞாயிறு

### திரியேகக் கடவுளே நமது நம்பிக்கை

### We belive in the Triune God

| | |
|---|---|
| எசேக்.1:4-28 | : கடவுளின் மகிமையான காட்சி |
| 2 கொரி.13:11-14 | : திரயேகக் கடவுளின் ஆசி |
| மத்.28: 16-20 | : இயேசு கிறிஸ்துவின் மிகப்பெரிய கட்டளை |
| சங்.98 | : கடவுளின் செயல்பாடுகள் |

என்றென்றும் நித்தியமாய் வாழ்கின்ற மூவொரு கடவுளே, எங்கள் மூதாதையரோடு பலவழிகளில் உம்மை வெளிப்படுத்தியபடி அவர்களோடு பேசியவரே, இந்த திரித்துவ இரகசியத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவும், புரிந்துகொள்ளவும் எங்களுக்கு வேண்டிய மனஉறுதியையும், விசுவாசத்தையும் தந்தருளும். அப்பொழுது நாங்கள் இந்த விசுவாசத்தில், நம்பிக்கையில் வேறூன்றி இத்தேசம் முழுவதும் உமக்காய் சீடர்களை உருவாக்குவோம். இவைகளை எல்லாம் மூவொரு கடவுளில் ஒருவரான எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்.** -மத்தேயு 28:19

## ஜூன் 18, 2017

## பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு

## வழிபாடு : மக்களுடைய நம்பிக்கையைக் கொண்டாடுதல்
## Worship: Celebration of People's Faith

| | | |
|---|---|---|
| ஏசா.6:1-8 | : | ஏசாயாவின் அழைப்பு: கடவுளின் காட்சி |
| வெளி.4:1-11 | : | விண்ணக அழைப்பு |
| யோவான் 4:16-26 | : | ஆவியோடும், உண்மையோடும் தொழுவதே வழிபாடு. |
| சங்.148 | : | அனைத்துலகமும் போற்றிடும் கடவுள் |

எல்லாம் வல்ல பரிசுத்த கடவுளே, உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருப்பவரே, வாழ்க்கை என்னும் பயணத்தில் எங்கள் இருதயத்தையும், மனதையும் ஒளிரச் செய்து அதன்மூலம் உண்மையான மனந்திரும்புதலை எடுத்துக்காட்டி, தூய்மையாவதை அனுபவிக்கச்செய்து அதன் மூலம் ஒவ்வொருநாளும் எங்களை வாழ்வின் பயணத்தில் வழிநடத்திட செய்யும்படி வேண்டுகிறோம். அப்போது நாங்கள் ஆவியோடும், உண்மையோடும் உம்மை வழிபட்டு எங்கள் நம்பிக்கையை கொண்டாடி உம்முடைய மகிழ்ச்சியின் பிரசன்னத்தினால் ஒவ்வொரு நாளும் வாழுவோம். இவைகளை எல்லாம் சதாகாலமும் ஒரே கடவுளாய் ஜீவித்து அரசாளுகின்ற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துமூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**தேவன் ஆவியாயிருக்கிறார்: அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்.** -யோவான் 4:24

## ஜுன் 25, 2017

## பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 3-ம் ஞாயிறு

### சான்று பகரும் சீடத்தும்

### Discipleship of Witness

| | |
|---|---|
| 2 இரா.2:1-15 | : எலியாவிலும் இருமடங்கு ஆற்றல்பெற்ற எலிசா. |
| தீத்து 2:1-15 | : கடவுளின் பணியாளர் செயல்பட வேண்டிய முறைகள். |
| யோவான் 3:22-30 | : திருமுழுக்குநர் யோவானின் சான்று |
| சங்.119:33-48 | : திருச்சட்டம் தரும் கற்றலும், நம்பிக்கையும். |

வாழ்வும், நீதியுமான எங்கள் கடவுளே, நல்லவரே, ஏழை மக்கள் மற்றும் சமுதாயத்தின் விளிம்பில் இருக்கும் மக்களின் உள்ளக் குமுறலை கேட்கின்றவரே, நாங்கள் உமக்கு விரோதமான காரியங்கள் செய்வதை விட்டுவிட்டு நேர்மையாக உம்முடைய பாதையில் நடந்திட எங்களை வனைந்தருளும். அப்போது நாங்கள் உறுதியான நம்பிக்கையில் தரித்திருந்து, உம்முடைய மகிமையில் நாங்கள் வெளிப்படும்படியாய் நீர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும் என்று தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருப்போம். இவைகளை எல்லாம் எங்களை இவ்வுலகில் சாட்சியாய் வாழும்படி குயவனைப்போல் வனைந்து, எடுத்து பயன்படுத்துகின்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்..

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நான் எப்பொழுதும் என்றைக்கும் உமது வேதத்தைக் காத்துக்கொள்ளுவேன்.** -சங்கீதம் 119:44

## ஜுலை 1, 2017

## உண்மை சாட்சியினால் மகிழ்ச்சி

## Joy of Witnessing the Truth

3 யோவான் 1:1-8

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**உன்னுடைய உண்மையைக் குறித்து சாட்சி கொடுத்த போது மிகவும் சந்தோஷப்பட்டேன்.** -3 யோவான் 1:3

## ஜுலை 2, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 4-ம் ஞாயிறு

## உக்கிராணத்துவ ஞாயிறு

## பொருப்பாண்மை: வளங்கள் மேலான பொறுப்புள்ள ஆளுகை

| | | |
|---|---|---|
| யாத்.18:13-27 | : | நீதிபதிகளை நியமித்து மோசே தன் பொறுப்பு களை பகிர்கிறார். |
| 2 கொரி.8:1-15 | : | மாசிதோனியத் திருச்சபைபோல் பகிர அழைப்பு. |
| மத்.25:14-30 | : | விண்ணரசை விளக்கும் தாலந்து உவமை |
| சங்.147:1-11 | : | நீதிநெறிகளை அறிவிக்கும் எல்லாம் வல்ல கடவுளைப் போற்றுவோம். |

எப்போதும் செயல்படும் கடவுளே, உமது அருமை மகன் இயேசு கிறிஸ்துவின் வழியே இரக்கத்தையும், முழுவாழ்வையும் வெளிப்படுத்தி, கிடைக்கும் மூலாதாரங்களுக்கு பொறுப்புள்ளவர் களாக இருக்க எங்களை அழைத்ததற்காக உமக்கு நன்றி கூறு கிறோம். தவறான வழியிலே பொருள் பெறுவதை, வெறுக்கிற வர்களாகவும், எங்களுக்கு கிடைக்கும் பொருட்களுக்கு உண்மையுள்ளவர்களாகவும், தெய்வ பக்தியுள்ளவர்களாகவும் இருந்து வாழ்வாதாரங்களை மேலாண்மை செய்ய அருள்தாரும். இதன் வழியாய் நிறைந்து வழியும், மகிழ்ச்சி உடையவர்களாக, பகிர்ந்தளிக்கிறவர்களாக உமது உண்மையான ஊழியர்களாக செயல்பட உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியே கேட்கிறோம். எங்கள் கடவுளே ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு சீர்கேடான வீண் பேச்சுக்களுக்கும், ஞானமென்று பொய் யாய் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு.** -1 தீமோ.6:20.

## ஜுலை 9, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 5-ம் ஞாயிறு

## இறையியல் கல்வி ஞாயிறு

## இறை மக்களை ஊக்குவித்தல்

## Equipping the people of God

| | | |
|---|---|---|
| உபா.6:1-17 | : | மாபெரும் கட்டளையும், எச்சரிப்பும். |
| எபேசி.4:7-16 | : | கிறிஸ்தவப் புதுவாழ்வு கிறிஸ்துவின் உடலில் ஒற்றுமை. |
| மத்.7:24-29 | : | இருவகை அடித்தளங்கள். |
| சங்.119:89-104 | : | திருச்சட்டத்தின் மீதான நம்பிக்கையும் அன்பும். |

எல்லாப் புரிந்துகொள்ளுதல்களின் கடவுளே, பலவழிகளில் தொடர்ந்து உம்மை வெளிப்படுத்துகிறவரே, உமது பலதரப்பட்ட அணுகுமுறைகளை பிரித்துப் புரிந்துகொள்ள இறைமக்களை ஊக்குவிப்பதற்காக எங்கள் பணியை துரிதப்படுத்த அழைக்கிற வரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் படுத்திருக்கும் போதும், எழுந்திருக்கும்போதும், நடக்கும்போதும், வீட்டிலே அமர்ந்திருக்கும்போதும், திருமறையின் மீதான தாக்கத்தை எங்கள் எதிர்கால தலைமுறையினரான குழந்தைகளுக்கு ஏற்படுத்த உதவி புரியும். அதன்படி திருவார்த்தையைக் கேட்கிற வர்களாக மட்டுமல்லாமல், அதன்படி செய்கிறவர்களாகவும், கன்மலையின்மேல் வீட்டைக் கட்டுகின்ற மக்களாகவும் இருக்க ஆற்றல் புரியவேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம். எங்கள் கடவுளே ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**உமது வேதத்தில் நான் பிரியமாயிருக்கிறேன்! நாள்முழு வதும் அது என் தியானம்.** -சங்கீதம் 119:97

## ஜுலை 16, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறு

### இறைமக்கள் : கிறிஸ்துவின் தூதுவர்கள்

### People of God : Ambassadors of Christ

| | | |
|---|---|---|
| யோசுவா 1:1-9 | : | யோசுவாவின் அழைப்பு. |
| 2 கொரி.5:16-6:10 | : | ஒப்புரவாக்கும் திருப்பணியும், பலன்களும். |
| மாற்கு 6:7-13 | : | பன்னிரு சீடர்கள் அனுப்பப்படுதல். |
| சங்.18:1-6, 20-30 | : | அரசரின் வெற்றிப்பாடல். |

அனைத்து ஆற்றலுள்ள கடவுளே, ஒப்புரவாக்கும் திருப் பணியை எங்களிடத்தில் நம்பிக்கையோடு ஒப்படைத்து அதை உறுதியோடும், துணிவோடும் செய்யத் துரிதப்படுத்துகிறவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிறிஸ்துவின் தூதுவர்களாய் செயல்பட நாங்கள் மனம் தளராமலும், உறுதி குலையாமலும், பயப்படாமலும் வாழ உதவிபுரியும். அதனால் நாங்கள் நற் செய்தியை அறிவிக்கவும், மக்கள் நற்செய்தியிலே நம்பிக்கை வைத்து, உம்மிடத்தில் மனந்திரும்பவும் அருள்புரியவேண்டு மென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியே கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவ னோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.** -2 கொரி.5:20.

## ஜூலை 23, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 7-ம் ஞாயிறு

## அருள்பொழிவு திருப்பணி: மாற்றத்தை உருவாக்க மாற்றம் பெற்றவர்கள்

## Ordained Ministry : Transformed to Transform

| | | |
|---|---|---|
| எசேக். 33:1-9 | : | கடவுள் அமர்த்தும் காவலாளியின் திருப்பணி. |
| 1 தீமோத். 3:1-13 | : | சபைக்கான கண்காணிப்பாளர், திருத்தொண்டரின் பண்புகள். |
| யோவான் 21:15-19 | : | பேதுருவை அழைக்கும் இயேசு |
| சங். 99 | : | கடவுள் அனைத்து உலகின் அரசர். |

எங்கள் தலைமை மேய்ப்பரான கடவுளே, ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் கவனிக்க வளரத்தெடுக்க எப்போதும் எங்களுக்கு அழைப்பு விடுப்பதற்காய் உமக்கு நன்றி செலுத்துகி றோம். உமது ஆடுகளாம் திருமக்களை வழிநடத்த உமக்கேற்ற தலைவர்களை எங்களிடத்திலிருந்து உருவாக்கும். அவர்கள் வழியே இவ்வுலகம் கிறிஸ்துவுக்குள் மாற்றம் பெறும் அனுவத் தைப்பெற ஆற்றல் தரவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாகக் கேட்கிறோம் எங்கள் கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்தமனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும்.**

-1 தீமோத்தேயு 3:9.

## ஜூலை 30, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 8-ம் ஞாயிறு

## திருமணம் : உடன்படிக்கையின் கொண்டாட்டம்

ஆதி.2:18-25 : கடவுள் கொடுக்கும் தகுந்த துணை.
எபி.13:1-6 : கடவுளுக்கு உகந்த வாழ்க்கை.
மத்.19:3-6 : தகுந்த துணை குறித்த இயேசுவின் அருள்மொழி.
சங்.127 : கடவுளுக்குப் பயப்படுவோருக்கு, கடவுள் அருளும் நலன்கள்.

குடும்பங்களின் கடவுளே, திருமண உடன்படிக்கையை ஏற்படுத்தி, குடும்பங்களுக்குள்ளே ஐக்கியம் என்ற பிணைப்பை உறுதிப்படுத்துகிறவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஒருவருக்கொருவருடனான அன்பில் தொடர, திருமண உடன்படிக்கையை மேன்மையுள்ளதாக எண்ண எங்கள் ஒவ்வொருவருக்கும் உதவி செய்யும். அதனால் தயவு, அன்பு என்னும் சூழ்நிலையில் எங்கள் தலைமுறைகள் வளரவும், சமூகம் அத்தகைய உறுதியான அடிப்படையில் நிற்கவும், கடவுளின் பெயர் மாட்சியுறவும் எங்களை ஆற்றல்படுத்த வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும், ஒரே கடவுளாக வாழ்ந்து வழி நடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் அன்பு ஒருக்காலும் ஒழியாது**. -1 கொரி.13:7,8

## ஆகஸ்ட் 1, 2017

## விசுவாசத்தின் மகிழ்ச்சி

## Joy of Faith

அப்போஸ்தலர் 16:25-34

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய் அவர்களுக்குப் போஜனங் கொடுத்து தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மன மகிழ்ச்சியாயிருந்தான்.** -அப்போஸ்தலர் 16:34

## ஆகஸ்ட்டு 6, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 9-ம் ஞாயிறு

### திருப்பணி ஞாயிறு

### திருப்பணி : அனைவருக்கும் நற்செய்தி

### Mission Good News to All

| | | |
|---|---|---|
| ஏசா.55:1-6 | : | ஆண்டவரின் பேரிரக்கம் |
| அப்.10:34-43 | : | பேதுருவும், கொர்னேலியுவும் |
| மத்.4:17-25 | : | இயேசுவின் பணி, சீடர்களை அழைத்தல் |
| சங்.146 | : | விடுதலையாளராம் கடவுள் போற்றி |

நற்செய்தியின் கடவுளே, முழுப்படைப்பிற்கும் நற்செய்தியை அறிவிக்க வானத்தையும், பூமியையும் உருவாக்கினவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது உயிருள்ள வார்த்தை களை எங்கள் இதயத்திலே பதித்தருளும். அந்த உயிருள்ள வார்த் தையினாலே ஏழைகளுக்கு நீதியையும், பசித்தவர்களுக்கு உணவையும், கட்டுண்டவர்களுக்கு விடுதலையையும், பார்வை யற்றோருக்கு பார்வையையும், அந்நியருக்கு பாதுகாப்பையும், கைம்பெண்களுக்கு மாண்பையும் உறுதி செய்ய உதவியருளும். இப்படி நற்செய்தியை உட்கொண்டவர்களாக, கிறிஸ்துவின் நிறைவாழ்வை பறைசாற்றவும், நற்செய்தியாய் வாழவும் அருள் செய்யவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும், ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார் பசியாயி ருந்தவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார் கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகிறார்.** -சங்கீதம் 146:7

**ஆகஸ்ட்டு 13, 2017**

**பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 10-ம் ஞாயிறு**

## திருமுழுக்கு எனும் திருவருட்சாதனம்

## Sacrament of Baptism

| | | |
|---|---|---|
| யாத்.14:15-31 | : | செங்கடலைக் கடக்கும் இஸ்ரவேல் மக்கள் |
| தீத்து 3:3-8 | : | அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் |
| யோவான் 3:1-8 | : | மீண்டும் பிறத்தல் பற்றி இயேசுவும் நிக்கதேமுவும் |
| சங்.32 | : | பாவ அறிக்கையும் மன்னிப்பும் |

அருள்நிறைந்த கடவுளே, உம்முடைய இரக்கத்தினாலும், நன்மையினாலும், எங்களை மீட்டு, தூய ஆவியரின்மூலம் எங்களைக் கழுவி மீள் உருவாக்கம் செய்ததற்காக நன்றி கூறுகிறோம். ஆவியினாலும், தண்ணீராலும் பிறத்தல் என்பதின் உண்மையான உட்பொருளை புரிந்துகொள்ள எங்களுக்கு உதவி புரியும். அதன் வழியாய் உம்முடைய அரசில் முழுமை யான நிறைவாழ்வை அனுபவிக்க அருள் தரவேண்டுமென்று உம்மோடும், எங்கள் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.** -ரோமர் 6:11

## ஆகஸ்ட்டு 20, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 11-ம் ஞாயிறு

## திருவிருந்து எனும் திருவருட்சாதனம்
## Sacrament of Holy Euharist

ஆதி.14:17-24 : ஆபிரகாமுக்கு மெல்கிசெதேக்கின் ஆசீர்வாதம்.

1 கொரி.10:15-17 : ஒரே உடலாய் ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிறோம்.

மாற்கு 14:12-26 : ஆண்டவரின் பஸ்கா திருவிருந்து

சங்கீதம் : படைப்பின் மேன்மை.

வானத்தையும், பூமியையும் உடைய உன்னதக் கடவுளே, நாங்கள் எல்லாரும் மீட்கப்பட சொந்த குமாரனையே பலியாக ஊற்றினீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். உண்மையிலே ஆசீர்வாதத்தின் பாத்திரத்தில் பங்குபெறுகிறோம் என்கிறபோது நாங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குள்ளவர்களாயிருக் கிறோம். கிறிஸ்துவுடன் பங்குடைய நாங்கள் கிறிஸ்துவின் பந்தியிலும், தீமையின் பந்தியிலும் பங்குபெறும் மாய்மாலக்கார ராக இருக்கக்கூடாது என்பதை உணர்த்தியருளும். இவற்றை எங்களுக்காக மீட்கப்பட்டவரும், எங்களை இணைத்தவரும், உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழி யாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கி றோம்.** -1கொரிந்தியர் 10:17.

## ஆகஸ்ட்டு 27, 2017
## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 12-ம் ஞாயிறு

### பல்சமய, சமூக சூழலில் கிறிஸ்தவரின் நிலை
### Christian Presence in Multi Faith Society

| | | |
|---|---|---|
| தானி.1:1-21 | : | வேற்றினத்து அரசரன் அவையில் தானியேலும் அவரது நண்பர்களும். |
| அப்.10:9-16 | : | பேதுருவுக்கான காட்சி: கடவுளின் தூய்மை. |
| மத்.13:31-33 | : | கடுகுவிதை, புளிப்பு மாவு உவமைகள். |
| சங்.67 | : | மக்களினத்தார் எல்லாரும் கடவுளைப் புகழ்வர். |

விதைப்பவரும், விளையச் செய்கிறவருமாகிய கடவுளே, இந்த உலகில் நாங்கள் புளித்தமாவைப்போல் செயல்பட அழைத்த தற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். பல்சமய, சமூக சூழலில் வாழும் நாங்கள் உம்மைத் தேடி வருபவர்களுக்குத் தடையாகச் செயல்படாமல் உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற உதவியரு ளும். உமது சித்தமாகிய புளித்தமாவைப்போல் செயல்பட்டு இவ்வுலகில் அநேகர் உமது நிழலில் வந்து சேரவும், அதனால் பல்லின மக்களின் மகிழ்ச்சி நிறைந்த பாடல்களால் உம்மைப் புகழவும் உதவி புரியவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவி யரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம். எங்கள் நல்ல கடவுளே ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர் ஆதலால், ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்.**

-சங்கீதம் 67:4

## செப்டம்பர் 1, 2017

# கொடுப்பதினால் மகிழ்ச்சி
# Joy of Giving

2 கொரிந்தியர் 8:1-9 : கொடுப்பதினால் மகிழ்ச்சி

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவர்கள் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.** -2 கொரிந்தியர் 8:2

## செப்டம்பர் 3, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 13-ம் ஞாயிறு

## கல்வி ஞாயிறு

## ஆசிரியர்கள், விடுதலையின் முகவர்கள்

## Teachers : Agents of Liberation

| | |
|---|---|
| நீதி.8:1-12 | : ஞானத்திற்குப் புகழ்பாடல் |
| அப்.8:26-38 | : பிலிப்புவும், எத்தியோப்பிய நிதியமைச்சரும் |
| மாற்கு 6:34-44 | : ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் |
| சங்.119:97-104 | : திருச்சட்டத்தின் மீதான அன்பு |

எல்லாம் அறிகின்ற கடவுளே, ஆபரணங்களைவிட ஞானமே முக்கியம் என்றும், தங்கத்தை தெரிந்துகொள்வதைவிட புத்தியையும், புரிந்துகொள்ளுதலையும், தெரிந்துகொள்ளவேண்டும் எனப்போதித்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கனிவும், இரக்கமுள்ள இதயத்தோடு எங்களை அணுகும், அதே நேரத்தில் உண்மையைத் தேடிக் கற்றுத்தரும் ஆசிரியர்களை எங்களுக்குத் தாரும். தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தேனிலும், மதுரமான உம்முடைய வார்த்தை என்ற அடித்தளத்தைக்கொண்டு எங்கள் ஆசிரியர்கள் செயல்படும்போது, உம்முடைய விடுதலையின் முகவர்களாக இருப்பார்கள். அப்படி செயல்பட உம்முடைய ஆற்றல் தரவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும், எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் நல்ல கடவுளே ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.** -சங்.32:8

## செப்டம்பர் 10, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 14-ம் ஞாயிறு

## பெண்கள் ஞாயிறு

## பெண்கள் மாற்றத்தை உருவாக்குவோர்
## Women as Change Makers

எண்.27:1-11 : செலோப்பியாத்தின் மகள்கள்.

அப்.16:11-15 : லீதியாளின் மனமாற்றம்.

லூக்.1:46-55 : மரியாளின் பாடல்.

யோவான் 4:27-30,
39-42: சமாரியப் பெண்ணும் இயேசுவும்.

சங்.119:57-46 : திருச்சட்டத்தின் மீதான ஆர்வம்.

எல்லா மாற்றங்களுக்கும் காரணரான எங்கள் மாறாத கடவுளே இறையரசைக் கட்டும் அனுபவத்திற்கு பங்காளிகளாக ஆண்களையும், பெண்களையும் சமூகமாக அழைத்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். இந்த உலகம் பெண்களின் உரிமையையும், தன்மான உணர்வையும் உணர்ந்துகொள்ளவும், வரலாற்றில் பெண்களின் பங்களிப்பைப் புரிந்துகொள்ளவும், எதிர்கால உருவாக்கத்திற்கான பெண்களின் உழைப்பிற்கு அங்கீகாரம் கொடுக்கவும், ஊக்கமும், உதவியும் செய்ய வேண்டுகிறோம். இதனால், இவ்வுலகம் பெண்கள் மாற்றத்தின் காரணிகள் என உணர்ந்துகொள்ள அருள்புரிய வேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தி மாற்றத்தைத் தரும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் கடவுளே. ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.** -லூக்.1:49.

## செப்டம்பர் 17, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 15-ம் ஞாயிறு

# அமைதியும் சிக்கலான சூழல்களில் தீர்வு காணுதலும்

# Peace amd Conflict Resolution

| | | |
|---|---|---|
| ஆதி.13:2-12 | : | ஆபிராமும், லோத்தும் பிரியும் நிகழ்வு. |
| அப்.6:1-6 | : | திருச்சபைப் பணிக்கான திருப்பணிவிடை யாளர்கள் நியமிக்கப்படல். |
| மத்.20:1-16 | : | ஒரு பணக்கூலி-திராட்சைத்தோட்ட பணியாளர் உவமை. |
| சங்.16 | : | கடவுள் மீதான பற்றுறுதியும் நம்பிக்கையும் |

சமாதானத்தின் கடவுளே, பிந்தினோர் முந்தினோராய் மாற்றும் கிருபையுள்ளவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். சமாதானம் பண்ணுகிறவர்களாக நாங்கள் இருக்க உம்முடைய ஞானத்தையும், குறை மதிப்பீடுகளையும், சிக்கல்களையும் தவிர்க்க உமது அறிவையும், சிக்கல்களுக்கு தீர்வுகாண உம்முடைய கிருபையையும் தரவேண்டுகிறோம். அதனால் இவ்வுலகம் சிக்கல்களற்ற அமைதியின் அனுபவத்தையும், நிறைவான மகிழ்வையும் இயேசுகிறிஸ்துவில் பெற்றிட அருள்தர வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தி சிக்கலான சூழல்களில் தீர்வுகள் தரும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக் கிறேன் அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.** -சங்கீதம் 16:8

## செப்டம்பர் 24, 2017
## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 16-ம் ஞாயிறு

## முதியோர் ஞாயிறு
## முதுமையின் வளமான கனிதருதல்
## Fruitfulness of the Elderly

| | | |
|---|---|---|
| ஆதி.17:1-8 | : | (ஆபிராம்-ஆபிரகாம்) ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை. |
| பிலே.1:8-22 | : | ஒனேசிமுக்காக வேண்டும் பவுலடிகளார். |
| மத்.7:13-20 | : | இடுக்கமான வாயிலும், போலி இறைவாக்கினரும். |
| சங்.92 | : | ஓய்வுநாளின் புகழ்ச்சிப்பாடல். |

உடன்படிக்கையின் கடவுளே, உம்முடைய மாறா அன்பையும், உண்மையையும், ஒவ்வொருநாளும் எங்களுக்கு அருள்பவரே, உம்முடைய வீட்டிலே எங்களை நாட்டி, கிறிஸ்துவுக்குள் எங்கள் எண்ணங்களை புதுப்பியும். நீதியுள்ளவர்களாயிருக்க ஆற்றல் தாரும். வாழ்விற்கான நேரான வழியைத் தேர்ந்தெடுக்க உதவி செய்யும். மகிழ்வான பாடல்களினாலும், துதியினாலும் எங்களை நிறைத்தருளும். அப்போது நாங்கள் பனைமரத்தைப்போல் செழித்து, எங்கள் சகோதர சகோதரிகளுக்கும், அயலாருக்கும் பயனுள்ளவர்களாயிருந்து எங்கள் முதிர்வயதிலும் கனியுள்ள வாழ்க்கை வாழமுடியும். அப்படிப்பட்ட அருளைத் தரவேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து, வளமான கனிதர வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் நல்ல கடவுளே. ஆமென்..

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்.** -சங்கீதம் 92:15

## செப்டம்பர் 27, 2017

## தென்னிந்திய திருச்சபை உருவான நாள்

### சாட்சியிடுவதில் ஒற்றுமை
### Unity in Witnessing

| | | |
|---|---|---|
| எசேக்.37:15-22 | : | யூதாவும் இஸ்ரயேலும் ஒரே அரசாதல். |
| எபே.4:1-6 | : | கிறிஸ்துவின் உடலில் ஒற்றுமை. |
| யோவான் 17:20-26 | : | ஒன்றாயிருக்க இயேசுவின் மன்றாட்டு. |
| சங்.122 | : | சீயோன்மலை திருப்பயணப்பாடல் - எருசலேம் வாழ்க. |

சர்வ வல்லமையுள்ள கடவுளே, எங்கள் ஆண்டவரும், உமது அருமை மகனுமான இயேசு கிறிஸ்து தம் இறை வேண்டலிலே அவரை நம்புகிறவர்கள் யாவரும் ஒன்றா யிருக்கவேண்டும் என்று மன்றாடினாரே, அப்படிப்பட்ட ஐக்கியத் தைக் கொண்டாடும் எங்கள் தென்னிந்தியத் திருச்சபைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த ஐக்கியத்திலே ஒன்று பட்டிருக்கும் எங்களுக்கு ஒத்த இருதயத்தை தந்து உம் பணியில் ஈடுபடச் செய்யும். அதனால் உம் அன்புக்கு வாழ்நாளெல்லாம் சாட்சிகளாயிருக்க அருள் செய்யவேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர் களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள் கிறேன்.** -யோவான் 17:21

## அக்டோபர் 1, 2017

## இளமையில் மகிழ்ச்சி

## Joy of Youthness

பிரசங்கி 11:9-12:1 : இளமையில் மகிழ்ச்சி

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**வாலிபனே உன் இளமையில் சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களில் உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்.**

-பிரசங்கி 11:9

## அக்டோபர் 1, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 17-ம் ஞாயிறு

## இறைமக்கள் ஞாயிறு : இறைமக்களின் சாட்சி

## Witness of the People of God

| | | |
|---|---|---|
| தானி.3:13-20 | : | பொற்சிலை வழிபாடும் எரிகிற அக்கினிச் சூளையும். |
| அப்.18:24-18 | : | எபேசில் அப்பொல்லோ கற்பித்தல். |
| லூக்.10:1-20 | : | எழுபத்திரண்டு சீடர்களை அனுப்புதல். |
| சங்.15 | : | கடவுள் மனிதரிடம் எதிர்பார்ப்பவை. |

அறுப்பின் கடவுளே, இவ்வுலகில் ஓநாய்களுக்குள் ஆட்டுக் குட்டிகளை அனுப்புவதுபோல் எங்களை அனுப்பியவரே, நாங்கள் சேவிக்கின்ற எங்கள் கடவுள், எரிகிற அக்கினிச் சூளைக்கும் எங்களைத் தப்புவிப்பார் எனத் தைரியமாக அறிக்கையிட ஆற்றல் தாரும். எவ்வித தீங்கிலிருந்தும் எங்களை விடுவியும். எரிகிற சூளைக்குள்ளும் எங்களோடு உலாவும். அப்போது நாங்கள் ஆவியிலே திடன்கொண்டு, எங்கள் ஆண்டவர் கற்பித்த வார்த் தைகளுக்கு சாட்சியாய் வாழமுடியும். அப்படிப்பட்ட கிருபைகளைத் தரவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

## அக்டோபர் 8, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 18-ம் ஞாயிறு

## மாற்றுத்திறனாளிகள் ஞாயிறு

## மாற்றுத்திறனாளிகள் : வாழ்வின் தூய்மை
## Differently Abled : Sancity of Life

யாத்.4:10-17 : மோசேயின் வாயாக ஆரோன்
2 கொரி.12:1-10 : பலவீனங்களில் மேன்மை பாராட்டுதல்
யோவான் 5:1-9 : 38 ஆண்டுகள் உடல்நலமற்றவர் நலமடைதல்
சங்கீதம் 37 : பொல்லார் நல்லார் முடிவுகள்

வாழ்வின் கடவுளே, நீதியை நேசிப்பவரே, கிருபையாய் ஒவ்வொரு வாழ்வையும் தூய்மைப்படுத்துகிறதற்காய் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்முடைய அருளை பலவீனமான, கிழிக்கப்பட்ட, துன்பப்படுத்தப்பட்ட, அவமானப்படுத்தப்பட்ட முட மாக்கப்பட்ட, மனநலமற்ற, மாற்றுத்திறனுடைய ஒவ்வொருவர் மேலும் பொழிந்தருளும். உமது கிருபையினால் மனதளவிலும், உடலளவிலும், மாற்றுத்திறனுடையோர் தங்கள் வாழ்வினை தூய்மையோடும், தன்மானத்தோடும் வாழ்வதற்கு உதவிபுரிய வேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்**. 2 கொரிந்தியர் 12:9

## அக்டோபர் 15, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 19-ம் ஞாயிறு

## இளையோர் ஞாயிறு

## தற்கால உலகில் இளையோரின் ஆன்மீகம்

## Spirituality of the Youth in Contermporary World

ஆதி.41:37-43 : யோசேப்பு எகிப்தின் ஆளுநர் ஆதல்
பிலிப்.3:1-16 : மீட்புக்கு வழி - இலக்கை நோக்கி ஓடுதல்
மத்.19:16-22 : இயேசுவைப் பின்பற்ற விரும்பிய செல்வந்தரான இளைஞர்
சங்கீதம் 111 : ஆண்டவரைப் போற்றுதல்

அருளும் இரக்கமும், நிறைந்த கடவுளே, உம்முடைய அற்புதமான செயல்களை எண்ணிப்பாரத்து, உமக்கு நன்றி செலுத்துகிறோம். கடவுளின் ஆவியர் வாழும் இடமாக நாங் களிருக்க எங்களுக்கு உதவிபுரியும். கிறிஸ்துவைப் பெற்றுக் கொள்ள எதையும் குப்பையாக எண்ணவும், அவரின் உயிர்த் தெழுதலின் ஆற்றலை முழுமையாக உணரந்துகொள்ளவும் எங்களுக்கு உதவிபுரியும். அவரின் துன்பங்களில் பங்கெடுத்து, அவரைப்போல் மாறி, அவரின் சாவில் இணைந்து செயல்பட அருள்புரியவேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து இளையோரை வழிநடத்தும் இளை யோரின் ஆன்மீகமாம் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், அவரு டைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தி யுண்டு. அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.** -சங்.111:10

## அக்டோபர் 22, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 20-ம் ஞாயிறு

## கடவுளின் ஆளுகைக்காக எந்த இழப்பையும் ஏற்றல்
## Taking risk for the Reign of God

எஸ்தர் 8:1-17 : தம்மைக் காத்துக்கொள்ளும்படி எஸ்தர் யூதரைத் தூண்டல்.

பிலிப்.2:25-30 : எப்பாப்பிரராத்துவின் துணிவு.

மத்.10:37-42 : இழப்பும் அதற்கான கைம்மாறும்.

சங்.12 : உதவிக்காக மன்றாடல்.

எங்களைப் படைத்த எங்கள் கிருபையுள்ள கடவுளே, எங்களை உமது சாயலில் படைத்து, வாழ்வின் எல்லா தீமை களுக்கும் விலக்கிக் காப்பதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். உமது இறையரசின் தூண்களான உண்மை மற்றும் நீதியின் பொருட்டு வரும் சோதனைகளிலும், துன்பங்களிலும் உமது திருவுளச்சித்தம் என்ன என்பதை எங்கள் வாழ்வில் புரிந்து செயல்பட உதவி செய்யும். உமது பெயர் மாட்சியுற உம் திருமைந்தன் இயேசு கிறிஸ்து எத்தீங்கையும், துன்பத்தையும் அனுபவிக்க ஆயத்தமாயிருந்ததுபோல நாங்களும் செயல்பட உமதருளைத் தரவேண்டுகிறோம். இறையரசிற்காக எவ்வகை இழப்பையும் ஏற்க ஆற்றல் தரவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து சிலுவையை ஏற்க வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழி யாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்.** -மத்தேயு 10:39

## அக்டோபர் 29, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 21-ம் ஞாயிறு

## சீர்திருத்த ஞாயிறு

## விசுவாசத்தைத் திரும்ப கண்டுபிடித்தலும் அதில் திரும்ப வாழ்தலும்

## Rediscovering and Reliving the Faith

| | | |
|---|---|---|
| 2 நாளா.34: 8-21 | : | யோசியாவின் சீர்திருத்தமும் - உபாகம நூல் கண்டுபிடிக்கப்படலும். |
| வேளிப்.2:1-7 | : | எபேசு திருச்சபைக்கான கடிதம் |
| யோவான் 2:12-22 | : | எருசலேம் கோவிலைத் தூய்மைப்படுத்துதல். |
| சங்.46 | : | நம்மோடு வாழும் கடவுள். |

எங்கள் கன்மலையும், பெலனுமான கடவுளே, ஆபத்தில் தப்புவிப்பதற்காய் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இறையரசின் மதிப்பீடுகளை மீண்டும் கண்டுணர உதவிடும். உமது வீட்டின் மீதான விசுவாசத்தில் வைராக்கியம் கொள்ளவும், தொடர்ந்து எங்கள் ஆண்டவரை ஆராய்ந்து கற்கவும், உமது நீதி, உண்மை மீதான உணர்வை பெருகவும் பண்ணவேண்டும் என மன்றாடுகிறோம். எனவே நாங்கள் தவறவிட்ட ஆதி அன்பை மீண்டும் பெற்று எங்களை புதுப்பித்துக்கொள்ள அருள்புரிய வேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து மாறாத விசுவாசத்தில் வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக.** -வெளிப்படுத்தல் 2:5

## நவம்பர் 1, 2017

## நிறைவான மகிழ்ச்சி

## Fulness of Joy

யோவான் 15:1-15 : நிறைவான மகிழ்ச்சி

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.** -யோவான் 15:11

## நவம்பர் 5, 2017
## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 22-ம் ஞாயிறு

# உலக ஞாயிறு பள்ளி திருநாள்
# நம்பிக்கையில் பேணி வளர்த்தல்
# Nurturing in Faith

| | |
|---|---|
| நீதி.23:15-26 | : பிள்ளைகளுக்கான ஆலோசனைகள் |
| எபே.6:10-18 | : கிறிஸ்தவ வாழ்வில் போராட்டம் |
| மத்.18:1-6 | : பரலோக ராஜ்ஜியத்தில் யார் பெரியவர்? |
| சங்.127 | : கடவுளின் அருளும், நலன்களும் |

எங்களின் பெரிய குருவாம் கடவுளே, உம்முடைய ஞானத்தினாலே இறைமக்களைக் கட்டி காப்பாற்றுகிறதற்காக உமக்கு நன்றி சொல்லுகிறோம். உமது வார்த்தையைக் கீழ்ப்படிதலோடு கேட்பவர்களாக எங்களை மாற்றும். உமக்குள் உறுதியாயிருக்க எங்களை வனையும். உம்முடைய சர்வாயுத வர்க்கத்தை அணிந்தவர்களாக்கும். நற்செய்தியின் இரகசியத்தை அறிவிக்கக் கூடிய துணிவைத் தாரும். இதனால் நாங்கள் உம்முடைய ஞானத்தை தாழ்மையோடு ஏற்று, இவ்வுலகின் தீமைகளுக்கு எதிர்த்து நிற்கவும், குழந்தைகளைப்போல உம்முடைய வார்த்தையில் பேணி வளர்க்கப்படவும் அருள்புரியவேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து உம்மீதான நம்பிக்கையில் வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண் போகாது.** -நீதிமொழிகள் 23:18

## நவம்பர் 12, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 23-ம் ஞாயிறு

## ஐக்கிய ஞாயிறு – Unity Sunday

## மண்பாண்டங்களில் பொக்கிஷம்

## Treasure in Clay Jars

| | |
|---|---|
| மீகா 6:1-8 | : இஸ்ரயேல்மீது ஆண்டவரின் வழக்கு. |
| 2 கொரி.4:7-15 | : மண்பாண்டங்களில் பொக்கிஷம். |
| மாற்கு 4:26-29 | : கடவுளினரசு முளைத்துக் தானாக வளரும் விதை - உவமை. |
| சங்.166:1-12 | : கடவுள் தம் மக்களுக்கு காட்டிய கருணை. |

எங்கள் அன்பின் கடவுளே, உம்மைத் துதிப்பதற்கு எங்களுக்குள் இசைவையும், ஐக்கியத்தையும், தந்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்மை நாங்கள் எல்லாரும் இணைந்து வழிபட உதவியருளும். உம்மை ஆவியோடும், உண்மையோடும் வழிபடும் ஐக்கிய சமூகமாக வளர உதவி செய்யும். இதனால் உம்முடைய எதிர்பார்ப்பான ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன் என்பதை நாங்கள் நிறைவேற்றிட அருள்புரியும். இந்த வழிபாட்டில் ஐக்கியம், எங்களது சாட்சியை இவ்வுலகில் உறுதிப்படுத்திட அருள்புரியவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து ஒரே மேய்ப்பனாக நின்று வழிநடத்தும் எங்கள் ஆண்டவர இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், எக்காலத்திலும் நீதியைச் செய்கிறவர்களும் பாக்கியவான்கள்.** -சங்.106:3

## நவம்பர் 19, 2017
## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 24-ம் ஞாயிறு

## பெண்குழந்தைகளின் ஞாயிறு
## பெண்குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதி செய்தல்
## Assuring Future for the Girl Child

2 இரா.5:1-5 : நாகமான் நலம்பெற சிறுமியின் ஆலோசனை.

அப்12:11-17 : பேதுருவின் விடுதலையும், ரோதை என்ற சிறுமியும்.

மாற்கு 5:21-24, 35-43 : இரத்தப்போக்குடைய பெண் நலம் பெறுதலும், சிறுமி உயிர்பெறுதலும்.

சங்கீதம் 8 : இறைவரின் மாட்சியும், மானிடரின் மேன்மையும்.

கிருபையுள்ள கடவுளே உமது திருமைந்தன் வழியாக பெல வீனரை பெலவானாகவும், தள்ளப்பட்டோரை நிறைவானவராக வும் மாற்றுவதற்காக உம்மைத் துதிக்கிறோம். ஓரங்கட்டப்பட்ட, தள்ளப்பட்ட பெண் குழந்தைகளை தயவாய் நோக்கி அவர் களுக்கு ஆற்றலையும், புது நம்பிக்கையையும் தந்தருளும். பெண்குழந்தைகளை அவர்களுக்குரிய முழு மரியாதையுடனும், தன்மானத்துடனும் சமூகத்தில் ஏற்றுக்கொள்ள எங்களுக்கு உதவி புரியும். மேலும், நீர் பெண் குழந்தைகளுக்கு தந்துள்ள சிறப்பான திறமைகளும், திறன்களும் இச்சமூகத்தை வளப் படுத்த உதவ அருள்புரியும். நாங்கள் இணைந்து விடுவிக்கப் படவும், ஆற்றல் பெறவும், எங்கள் பெலவீனங்களையும், ஆற் றல்களையும், வரங்களையும், திறமைகளையும் பயன்படுத்த உதவி புரியவேண்டுமென்று சரியான எதிரகாலத்திற்கு நேராக

வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவர் அவளைப் பார்த்து, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்றார்.** -மாற்கு 5:34

## நவம்பர் 26, 2017

## பெந்தேகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 25-ம் ஞாயிறு

## ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தப்படுதல்

## Preparing for the coming of the Lord

ஓசியா 10:12-15 : தண்டனைத் தீர்ப்பு பற்றிய ஆண்டவரின் அறிவிப்பு

கொலோ.4:1-6 : பவுலடியாரின் அறிவுரைகள்

லூக்.12:35-40 : விழிப்பாயிருக்கும் பணியாளர்கள்

சங்.37:1-24 : பொல்லார் நல்லோர் முடிவுகள்

சர்வ வல்லமையுள்ள கடவுளே, எங்கள் ஆண்டவரும் உமது திருமைந்தனுமாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய் எல்லாவற்றையும் திரும்பக் கட்டுவதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் ஆண்டவரின் வருகைக்காக ஆயத் தப்படும் வகையில் எங்கள் எண்ணங்களையும், செயல்களை யும், தூய்மையாக்கும் புத்தியுள்ள கன்னியரைப்போல் எப் போதும் விழிப்பாயிருந்து உமது திருமைந்தனும், திருச்சபையின் தலையுமாகிய அவரைச் சந்திக்க உதவி புரியும். அவர் மூலமாக முழுப்படைப்பும் புதிதாக்கப்படவும், புத்தெழுச்சிப் பெறவும், அருள்புரியவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து விழித்திருந்து பணியாற்ற வழிநடத் தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட் கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு.** -வெளிப்படுத்தல் 3:11

## டிசம்பர் 1, 2017
## உலகிற்கு மகிழ்ச்சி
## Joy to the World

 லூக்கா 2:8-17 : உலகிற்கு மகிழ்ச்சி

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண் டாக்கும் நற்செய்தியை உங்களுக்காக அறிவிக்கிறேன்.**

-லூக்கா 2:10

## டிசம்பர் 3, 2017

## வருகையில் முதல் ஞாயிறு - வருகையின் காலம்

# கிறிஸ்துவின் வருகையை மகிழ்வுடன் எதிர்நோக்கல் (மரியாள் எலிசபெத்தை சந்தித்தல்)

# Joyful Expectation of Chirst's Coming

எரே.33:10-16 : ஆண்டவரின் வாக்குறுதி

1 தெச.3:6-13 : தெசலோனிக்கே செல்ல பவுலின் ஏக்கம்

லூக்.1:39-45 : மரியாள் எலிசபெத்தை சந்தித்தல்

சங்.68:11-20 : இறைவனின் வெற்றிப் பவனி

எல்லா நாளுக்கும், கிழமைக்கும் கடவுளே, உமது மகனின் வழியாக நாங்கள் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும், சமா தானத்தையும், மீட்பையும் கண்டுகொள்ள உதவியதற்காக நன்றி கூறுகிறோம். மீட்பின் முழுமைக்கான ஏக்கத்தையும், அதற்காக மன்றாடும் மனதையும் எங்களுக்கு தந்து உதவி புரியும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் தூயவர்களோடு வருகையில் நாங்கள் பழுதில்லாதவர்களும், குற்றமில்லாத வர்களும், தூயோராகவும் உம்மால் அடையாளப்படுத்தப்பட, உமது மீட்பின் மகிழ்ச்சியில் நாங்கள் எப்போதும் வாழ அருள் புரியவேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து உமது மீட்பில் நிலைத்து நிற்க வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அந்நாட்களில் யூதா இரட்சிக்கப்பட்டு, எருசலேம் சுகமாய் தங்கும், அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது அவருடைய நாமம்.** -எரேமியா 33:16

## டிசம்பர் 10, 2017
## வருகையின் இரண்டாம் ஞாயிறு

## திருமறை ஞாயிறு
## கடவுளின் திருவாக்கு : நம் வழிக்கு ஒளி
## Word of God : Light to our path

| | | |
|---|---|---|
| ஏசா.55:6-13 | : | இஸ்ரயேல்மீது ஆண்டவர் கொண்ட அன்பு |
| கலா.1:11-17 | : | பவுலின் அழைப்பு |
| லூக்.1:67-80 | : | சகரியாவின் பாடல் |
| சங்.119:105-112 | : | திருச்சட்டத்தின் ஒளி |

நித்திய வார்த்தையாம் கடவுளே, உமது திருச்சபையாம் எங்களோடு தொடர்ந்து பேசுவதற்காக உமக்கு நன்றி செலுத்து கிறோம். உமது திருவார்த்தையைக் கேட்பதற்கு ஆற்றல் தர வேண்டுமென மன்றாடுகிறோம். எங்கள் தீய வழிகளிலிருந்து எங்களைத் திருப்பி உம்முடைய வார்த்தைகளை எங்கள் கால்களுக்குத் தீபமாயும், எங்கள் பாதைக்கு வெளிச்சமாயும் தந்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது வார்த்தை நீர் அனுப்பிய உமது நோக்கமாகிய எங்கள் பாதங்களை உமது சமாதானத்துக்கு நேராய் வழிநடத்திவிட்டு உம்மிடம் திரும்ப அருள்புரியவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும், ஒளியாகிய வழியாகிய வார்த்தையாகிய எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழி யாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது**. -சங்கீதம் 119:105.

## டிசம்பர் 17, 2017
## வருகையின் மூன்றாம் ஞாயிறு

### மீட்புக்கான எதிர்நோக்கு
### Hope of Salvation

| | |
|---|---|
| செப்.3:14-20 | : மகிழ்ச்சிப்பாடல் |
| 2 பேதுரு 3:8-13 | : ஆண்டவருடைய வருகை |
| மத்.1:18-25 | : இயேசுவின் பிறப்பு |
| சங்.43 | : நாடு கடத்தப்பட்டோர் மன்றாட்டு |

எங்கள் மீட்பரும், எங்கள் மீட்பில் நம்பிக்கையுள்ள கடவுளே, நீர் எங்களோடிருக்கும் இம்மானுவேல் என்றும், நீரே எங்கள் மீட்பர் என்றும் நம்பி ஒரு தூய்மையான தெய்வீக வாழ்வை நாங்கள் மேற்கொள்ளவும், நீர் எங்களுக்கு ஒரு புதிய வானத் தையும், புதிய பூமியையும் தரப்போகிறீர் என்று எதிர் நோக்கவும் உம்முடைய ஞானத்தைத் தரமன்றாடுகிறோம். உம் ஞானத் தால் எங்கள் எண்ணங்களில் நீர் எங்களை அழைத்த நோக்கத்தைப் புரிந்துகொள்ளவும், உம்மேலான நம்பிக்கை யில் வளரவும், அருள்புரியவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழி நடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார். இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார், இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.**

-செப்பனியா 3:15

## டிசம்பர் 24, 2017
## வருகையின் நான்காம் ஞாயிறு

### களிகூரு கடவுள் அருகில் இருக்கிறார்
### Rejoice, The Lord is near

| | |
|---|---|
| சகரியா 2:6-13 | : நாடு கடத்தப்பட்டோர் திரும்பி வர அழைப்பு |
| 1 தெச.5:12-24 | : பவுலின் பொதுவான அறிவுரைகள் |
| யோவான் 1:14-24 | : வார்த்தை மாம்சமானதும், யோவானின் சான்றும் |
| சங்.50:1-15 | : உண்மை வழிபாடு |

நித்திய கடவுளே, யூதாவின் பட்டணங்களில் சிறிய பட்டணத்திற்கு உமது மகனை அனுப்பி முழு உலகிற்கும் சமாதானத்தை அருளினதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அந்த வார்த்தை மாம்சமாகி எங்களுக்குள் கிருபையும், சத்தியமுமாக வாசம்பண்ணினாரே, அவர்மேல் நம்பிக்கை வைக்கவும், அவரைப் பெற்றுக்கொள்ளவும், அவரைக் கண்டுகொள்ளவும் எங்களுக்கு உதவிபுரியும். அவர் வழியாய் நாங்கள் உமது பிள்ளைகளாக உமக்குள் வாழ்ந்து நிலைத்திருக்க அருள்புரிய வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.** -யோவான் 1:14

## டிசம்பர் 25, 2017
## கிறிஸ்து பிறப்பின் பண்டிகை

## கிறிஸ்து பிறப்பின் பண்டிகை – அமைதியின் அரசருக்கான இடத்தை அறிதல்

## Christmas : Finding space for the Prince of Peace

ஏசா.9:2-7 : வரவிருக்கும் அரசர்.
எபே.1:3-14 : கிறிஸ்துவின் வழியான மீட்பின் திட்டம்.
லூக்.2:1-14 : இயேசுவின் பிறப்பும் மேய்ப்பர்களும்.
சங்.85:8-13 : நாட்டின் நலனுக்கான மன்றாட்டு

கடவுளே, எங்களைப் படைத்தவரே, மீட்பவரே, நிலைபெறச் செய்பவரே எங்களுக்காக கன்னிமரியின் கருவில் மனிதனாக அவதரித்து, மாட்டுக்குடிலில் கிடத்தப்பட்டவரே, எங்களோடு வாழும் இம்மானுவேலாக இருப்பதற்காக நன்றி கூறுகிறோம். சிலுவையின் மரணபரியந்தம் தாழ்த்திய கீழ்ப்படிதலிலிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள முன்மாதிரி தந்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். சமாதானப் பிரபுவாகிய உமக்கு எங்கள் மனதிலே இடம் தந்து, உமது மீட்பின் நற்செய்தியை நாங்கள் அனுபவிக்கவும், அதை மற்றவர்களோடு பகிர்ந்தளிக்கவும் ஆற்றல் தரவேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து, அமைதியின் அரசராம் வியத்தகு ஆலோசகராம் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழி யாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப் பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்.** -எபேசியர் 1:12

## டிசம்பர் 31, 2017

## கிறிஸ்து பிறப்பிற்கு பின்வரும் முதலாம் ஞாயிறு

## குடும்ப ஞாயிறு - குடும்பம் கடவுள் பரிசு
## Family - Gift of God

| | | |
|---|---|---|
| யோசுவா 24:14-22 | : | யோசுவாவின் வழி புதுப்பிக்கப்படும் உடன்படிக்கை. |
| எபேசியர 3:14-21 | : | கிறிஸ்துவின் அன்பு. |
| மாற்கு 3:31-35 | : | இயேசுவின் உண்மையான உறவினர். |
| சங்கீதம் 128 | : | கடவுளுக்குப் பயந்து நடப்பதன் பயன்கள். |

அனைத்துக் குடும்பங்களின் தலைவராம் கடவுளே, பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள குடும்பங்களுக்கு மூலகாரணரும், பெயரையும் கொடுப்பதற்காய் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்மை மட்டுமே சேவிக்கவேண்டும் என்ற திடமான முடிவெடுக்கக்கூடிய ஞானத்தை எங்கள் குடும்பங்களுக்கும் எங்களுக்கும் தாரும். அதனால் நாங்கள் எப்போதும் உமது திருமைந்தன் இயேசு கிறிஸ்துவின் குடும்பத்தில் உறுப்பினர்களாக நிலைத்திருக்க அருள்புரியவேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியரோடும், ஒரே கடவுளாக வாழ்ந்து குடும்பமாய் வழிநடத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கேட்கிறோம் எங்கள் நல்ல கடவுளே. ஆமென்..

மகிழ்விக்கும் மன்னா - மனன வசனம்

**நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்பாம்**. -யோசுவா 24:15

## LITURGICAL COLOURS - 2017

| | |
|---|---|
| January 1 to January 6 | White |
| January 7 to February 28 | Green |
| March 1 to April 15 | Purple |
| April 16 to June 3 | White |
| June 4 to 10 | Red |
| June 11 | White |
| June 12 to December 2 | Green |
| December 3 to December 24 morning | Purple |
| December 24 evening to December 31 | White |

**Note:**

This note is added to help those congregations who use Liturgical colours.

**White** is the colour for the festival periods from Christmas Eve to the festival of Epiphany, from Easter day to the eve of Pentecost, and for Trinity Sunday. It is also used for marriages, thanksgiving services, harvest festivals, the feast of dedication of a church and for feasts commemorating saints. White is suitable for baptism, confirmation and ordination, though red may be preferred.

**Red** is used on the feast of Pentecost, and during the week between Pentecost, and Trinity Sunday. It is used on All Saints' day and for the feasts of those saints venerated as martyrs. It is appropriate for any service which focuses on the gift of the Holy Spirit, and is therefore suitable for baptism, confirmation and ordination.

**Purple** is the colour for Advent season and Lenten season and is therefore used from the first Sunday in Advent to the fourth Sunday in Advent; from Ash Wednesday until Holy Saturday. However, white may be preferred at holy communion service on Maundy Thursday. Purple is recommended for funerals and for the commemoration of the faithful departed, although either black or white may also be used. White is preferred at the funeral of a child.

**Green** is the colour for ordinary Sundays. It is used between Epiphany and Ash Wednesday, and between Trinity Sunday and Advent Sunday.

**Orange / Saffron** CSI Episcopacy has instituted Orange/Saffron Hand bands and stolls for its Bishops. Orange is colour of India & it is on the top of the Indian Flag symbolizing Indian spirituality of Prayer, Meditation, Sacrifice, Selflessness and Commitment. The CSI Episcopal vestments do not change the colours through out the year, for Episcopacy stands for continuity of Pastoral Leadership, Solemnity & Dignity of Liturgical continuance and perpetual Theological reflection and commitment to God and to His Word and to His Church.